www.padippakam.com



# எழுச்சி



தமிழீழ விடுதலை இயக்கத்தின் உத்தியோக பூர்வமான ஏடு....... ரூ.2/-

குரல்-5 TELO - Thamil Eelam Liberation Organization - ஜன, பிப்ர —1985

## ரெலோஸ்ட்டுக்களின் தீவிர தாக்குதல். மாங்குளம் முறிகண்டிப்பாதையில் ரயில் தகர்ப்பு.

## 298 அரச இராணுவம் பலி

## இனவெறி அரசு கிலி.

சர்வதேச பயங்கரவாதிகளுக்கும், சிறிலங்கா இன வெறி அரசுக்கும் எதிராக, தொடர்ந்து தாக்குதலை நிகழ்த்திவரும் டெலோ இராணுவத்தினரின் தாக்குதலான ரெயில் தகர்ப்புச் சம்பவம் அரசு இராணுவத்தினரை பயங்கர அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இத் தகர்ப்பில் 298 இராணுவ வீரர்களுக்கு மேல் மாண்டனர். அதிக எண்ணிக்கை ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. 10 பெட்டிகள் முற்றுகச் சேதமடைந்தது. 2 பெட்டிகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

ஆக்கிரமிப்புச் சிறிலங்கா கூலிப்படைகள் சர்வதேச பயங்கரவாதிகள் துணைகொண்டு தமிழ் ஈழத்தில் நாளும் புரியும் கொள்ளை, கொலை, கற்பழிப்பு போன்ற கொடிய செயல்களிலிருந்து மக்களை பாதுகாப்பதற்காகவும் எமது பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து கூலிப் படைகளை விரட்டி அடிப்பதற்காகவும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் அரச இனவெறியர்களுக்கு எதிராக போராட்டத்தை ஆரம்பித்து இருப்பது தெரிந்ததே.

இதன் அடிப்படையில் நிகழ்த்தப்பட்ட தாக்குதலே புகையிரத வண்டி தாக்குதல் ஆகும். 19—01—85 அன்று இரவு 8-30 மணியளவில் அரச இனவெறி ராணுவத்தினர் பயணம் செய்த யாழ் தேவி புகையிரதம், பழைய முறி கண்டியில் ரெலோ ராணுவத்தினரால் கண்ணி வெடிகளை பாவித்து தகர்த்து எறியப்பட்டது..



தகர்க்கப்பட்ட ரயில் பெட்டிகளில் சில...

இதில் முற்றாக 10 பெட்டிகள் சேதமடைந்தன 298க்கு மேற்பட்ட இனவெறியர்கள் உயிர் இழந்தனர். சேதமாகாமல் தப்பிய 2 பெட்டிகளும் ரெலோ ராணுவத்தால் தீயிடப்பட்டு சேதமாக்கப்பட்டன.

தனது ஒவ்வொரு தாக்குதல்ன் போதும் மக்களின் பாதுகாப்பிற்கு உத்திரவாதம் அளிக்கும் ரெலோ இந்த தாக்குதலின் போதும் மக்களின் பாதுகாப்பிற்கான முன்னேற்பாடுகளை செவ்வெனே செய்தனர்.

பொது மக்கள் தகர்க்கப்பட்ட யாழ்தேவி புகை வண்டியில் பிரயாணம் செய்வதைத் தடுப்பதற்காக கொழும்பிலிருந்து யாழ் தேவி, யாழ் வருமுன்னரே பளைக்கும் பாந்தனுக்கும் இடையில் புகையிரதப் பாதை சேதப்படுத்தப்பட்டது. கிளிநொச்சியிலிருந்து கொழும்பிற்கு பிரயாணம் செய்ய விருந்த பொது மக்களுக்குப் பயணம் செய்ய வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டதுடன், கிளிநொச்சிப் போலீஸ் நிலையம் தாக்கப்படுவதாக வதந்தியும், பரப்பப்பட்டு, போலீஸ் நிலையத்திற்கு சிறு வெடி குண்டுகளை வீசிக் கலவரப்படுத்தியதாலும், உமையாள்புரத்தில் கண்ணி வெடி வைத்துத் தாக்கப்பட்டதாலும் பொதுமக்கள் பயணம் செய்து தடுக்கப்பட்டதுடன் அரசு படைகளை கிலி கொண்டு நடுங்கி — முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்கவும் வழி செய்யப்பட்டது. இதனுல் தாக்குதலின் பின்பும் பொது மக்கள் சுதந்திரமாக நடமாடக் கூடியதாக இருந்தது.

இலங்கையில் தமிழர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் நடத்தப்பட்ட தாக்குதல்களில் இந்தத் தாக்குதல் அதி தீவிரமான தாக்குதலாகும் என லண்டன் பி.பி.சி தனது செய்தியில் ஒலிபரப்பியது.

ஸ்ரீலங்கா இனவாத அரசு தமிழ் பேசும் மக்களை முழுமையாக அழிப்பதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டு அமெரிக்க

(௮ம் பக்கம் பார்க்க...)

## அரச பயங்கரவாதிகளின் பொய்ப்பிரச்சாரம்



தமிழ் ஈழ விடுதலை இயக்கத் (ரெலோ) தலைவர் ஸ்ரீ சபாரத்ணம் பெல்ஜியம் நாட்டு விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டிருப்பதாகப் பத்திரிகைகளில் வெளியான செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை.

ஸ்ரீலங்கா அரசு கைது செய்யபபபடடவர் அவர்தானு என்பதை அறிய போலீஸ் கோஷ்டி ஒன்றை அனுப்பியிருந்தது. கைது ஆகியவர் ஸ்ரீ சபாரத்ணம் தான் என்றும்: அவரை ஸ்ரீலங்காவிற்கு கொண்டு வர பெல்ஜியம் அரசாங்கத்துடன்

(௮ம் பக்கம் பார்க்க)

## ரெலோவின் புரட்சிகர மக்கள் எழுச்சிக்குரல்.

படிப்பகம்

www.padippakam.com



தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
TELO

# விடுதலைக்குரல்

தமிழ் ஈழத்திலே சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்புப் படைகளின் அட்டகாசங்கள் நாள்தோறும் அதிகரித்துக் கொண்டே போகின்றன. நாளாந்தம் தமிழ்ப்பேசும் மக்கள் கண்டபடி சுட்டு வீழ்த்தப்படுகிறுர்கள். பகிரங்கமாகத் தெருக்களிலும், வீடுகளிலும் வைத்துச் சுட்டுக் கொல்லப் படுவது தவிர பெருந் தொகையான இளைஞர்கள் கைது செய்யப்பட்டு எங்கேயென்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாதபடி பல்வேறு இராணுவ முகாம்களுக்கும் கொண்டு செல்லப்படுகிறுர்கள். இந்தச் சிறைக் கூடங்களிலும் இராணுவ முகாம்களிலும் வைத்துத் தமிழர் களைச் சித்திரவதை செய்வதும், கொலைகள் புரிவதும் ஸ்ரீலங்காவின் அரசு படைகளுக்குச் சாதாரண விஷயமாகப் படுகிறது.

பயங்கரவாத ஒழிப்பு சிங்கள மக்களுக்குப் பாதுகாப்பு என்ற போர்வையில் பற்பல ஒடுக்குமுறைச் சட்டங்களை நாளும் நடைமுறைப்படுத்தி தமிழ்ப் பேசும் மக்களின் சொந்த மண்ணை அபகரித்துக் கொண்டும், சிங்கள இனவெறிக் காடையர்களை ஆயுதபாணிகளாக மாற்றி தமிழ்ப்பேசும் மக்கள் மேல் ஏவி விட்டுள்ளது.

தொடர்ச்சியாக இந்த நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாமல் அவதியுறும் தமிழ்ப்பேசும் மக்கள் தமது சொந்த மண்ணைவிட்டு வெளியேறும் நிலைக்குத்தள்ளப்பட்டுள்ள துடன் அகதிகளாக நாள்தோறும் வெளியேறிக் கொண்டும் இருக்கின்றனர்.

தமிழ் மக்களின் நியாயமான உரிமைக்குரலுக்கு என்றுமே மதிப்பளிக்காத ஸ்ரீலங்கா இனவாத அரசு, இலங்கையை பௌத்த, சிங்களப் பூமியாக பிரகடனம் செய்யும் முயற்சிக்கு இடையூருன தமிழ்ப்பேசும் மக்களைப் பூண்டோடு அழிப்பதற்கான சகல விதமான முயற்சிகளிலும் முழு மூச்சாக இறங்கிச் செயற்பட்டு வருகிறது.

இந்தச் செயற்பாடுகளுக்குப் பக்கபலமாக, அதாவது தமிழ்ப் பேசும் மக்களின் எதிர்ப்பை முறியடிக்கு முகமாக, சர்வதேச ரீதியாக பயங்கரவாதச் செயல்களை மேற்கொ. ர பவர்களையெல்லாம் தனது நேச அணியாகக் கூட்டுச் சேர்த்து வைத்துள்ளது.

சர்வதேச பயங்கரவாதிகளினதும், ஸ்ரீலங்கா அரச பேரின வாதிகளினதும் வன்முறையினுல் நாளும் அல்லல் படும் தமிழ்ப்பேசும் மக்கள் அடக்குமுறையின் பிடியி லிருந்து விடுதலை பெறுவதற்கு அகாவது தமிழ் ஈழத்தை வென்றெடுப்பதற்கு ஆயுதப் போராட்டமே அறுதி யானதும், இறுதியானதுமான தீர்வு என்பதில் முழு நம் பிக்கை கொண்டுள்ளது ன், ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கும் இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொள்வதில் சிறிதும் தயக்கமின்றிச் செயல்படுகின்றனர்.

மக்களின் இவ் உறுதியான எண்ணப்பாட்டைக் காலம் காலமாக படுகுழியில் தள்ளிக் கொண்டிருந்த தமிழ் சந் தர்ப்பவாத அரசியல் தலைமைகள், இன்றும் தங்கள் சந்தர்ப்ப வாத அரசியலை மூட்டை கட்டி வைக்கும் நோக்கம் சிறிதும் இல்லாமல், மக்களின் எண்ணங்களுக்கு சற்றேனும் மதிப்பளி யாது, இனவாத அரசுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டு, நாளுக்குநாள், புதிய புதிய அறிக்கைகளை வெளியிட்டும் மக்களை ஏமாற்ற முனைந்து கொண்டு இருக்கின்றனர்.

பதவி மோகமும், பண ஆசையும் தமிழ் சந்தர்ப்பவாத அரசியல் தலைமைகளின் எண்ணங்களை முழுமையாக ஆக்கிர மித்துக் கொண்டுள்ள நிலையில் தமிழ்ப்பேசும் மக்களின் விடுதலையை இத் தலைமைகள் கருத்தில் கொள்ளும் என்று நம்பியிருந்தகாலம் மலையேறிவிட்டது.

இத் தலைமைகளின் சந்தர்ப்பவாத அரசியல் தலைமை களின் போக்கையே விடுதலைக்காகத் தீவிரமாகப் போராடும் இயக்கங்களும் கடைப்பிடிப்பது, அரசியல் ரீதியாக சர்ச்சைப்பட்டுக் கொண்டிருப்பதும் தமிழ்ப்பேசும் மக்களின் நம்பிக்கையைச் சிதறடிப்பதேயாகும்.

சிலர் ஐந்தாண்டுத் திட்டம், ஆறுண்டுத்திட்டம் என்று தமிழ் ஈழவிடுதலைக்கு நீண்ட காலத் திட்டங்களைத் தீட்டிக் கொண்டு இருப்பதாகச் சொல்வதும், உலகத்தில் பல்வேறு நாடுகளின் விடுதலைப் போராட்டக் காலங்களில் அந்தந்த நாடுகளில் ஏற்பட்டிருக்கும் இழப்புகளுடன் ஒப்பிடும்போது எமது மக்களின் உயிர் இழப்புகள் எண்ணிக்கையில் குறைவானதே என்று தங்கள் இயக்கப் பிரசுரங்களில் பன்னிப் பன்னி எழுதிக் கொண்டிருப்பதும், எமது மக்கள் படும் துன்பங்களை இவர்கள் சரியாக உணர்ந்து கொள்ள வில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது. இப்போது போகிற போக்கிலே, ஸ்ரீலங்கா அரச படைகளின் அட்டூழி யங்கள் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டேயிருக்குமா ஞல் இன்னும் ஐந்தாண்டுகளிலே தமிழர் என்ருெரு இனம் எமது மண்ணில் இருக்குமா என்பது சந்தேகமே. எமது மக்கள் அனைவரையும் கொன்ருெழிப்பதற்கான சூழ்நிலைகளை மேலும் அனுமதித்து விட்டு பிறகு எவர்பொருட்டுத் தமிழ் ஈழம் அமைப்பது!

ஒரு குறிப்பிட்ட குழுவினர் மட்டும் தாங்கள் தான வீரர்கள், தங்களால்தான் முடியும் என்று மார்தட்டிக் கொள்வதனுல் மட்டும் தமிழீழம் கிஞ்சித்தும் சாத்திய மாகாது.

தமிழ் மக்கள் படுகின்ற உண்மையான துயரங்களைப் புரிந்து கொள்ளாதவர்களாக இருக்கும் சிலர் ஒரு காலத்துச் சாதி வெறிக்கு ஒப்பாகத் தமிழ் இளைஞர்களிடையே இயக்க வெறியினை ஏற்படுத்துவதிலேயே பிரதானமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறுர்கள். தான்தான் என்று சில தனிநபர்கள் தங்கள் பெயர்களைப் பரப்பிக் கொண்டிருப்பதற்கும், சில தனிநபர்கள் தங்கள் நெடுங்காலக் கோஷ்டி மோதல்களை மேலும் தொடர்ந்து கொண்டிருப்பதற்கும், இது தருணமல்ல என்று ஆணித்தரமாகக் கூறிவைக்க வேண்டியிருக்கிறது.

இக்கால கட்டத்தில், மிகமிக வேகமாக அழிவுப் பாதைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களின் விடுதலையானது அரசியல் பேசிப் பேசி முரண்பாடான கருத்துக்களினுல் சர்ச்சைப்பட்டுக் கொண்டிருப்பதனுல் கிடைத்து விடாது.

விடுதலை இயக்கங்கள் ஒவ்வொன்றும் தங்களுக்கென அரசியல் அறிக்கைகளை உருவாக்கிக் கொண்டு, தங்களுக்குள் முரண்பட்டுக் கொண்டு செயல்படுவதானது மக்களின் நெருக்கடியான சூழ்நிலையைப் புரியாத தன்மையே எனலாம்.

ஸ்ரீலங்கா இனவாத அரசின் இராணுவ அமைச்சர் அத்துலத் முதலி கூறியிருக்கிறுர் "தமிழ் மக்களிடையே பல இயக்கங்கள உண்டு. இவற்றுக்கிடையே மேலும் மோதல்களை ஏற்படுத்தியே இவ்வியக்கங்களைப் பூண்டோடு அழித்து விடுவேன்" என்று. அத்துலத் முதலியின் இந்தக் கூற்றை மெய்ப்பிக்கும் விதத்திலே இன்றும் சிலர் நடந்து கொண்டிருப்பது எமக்கு மிகுந்த மன வேதனையையே அளிக் கிறது.

எமது மக்களைப் பேரழிவில் இருந்து காப்பாற்றுவதற்கு இயக்கங்கள் தமக்கிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளை மூட்டைகட்டி வைத்துவிட்டு இராணுவ ரீதியில் ஒன்று பட்டுச் செயற்பட வேண்டும் என்பதே எல்லா இயக்கங் களுக்கும் நாம் விடுக்கும் வேண்டுகோளாகும்.

இயக்கங்கள் ஒன்றிணைவது என்று நாம் சொல்லும்போது இப்போதைக்கு நடைமுறையிற் சாத்தியப்படாதது என்று தோன்றும் விவகாரங்களைப் பேசிக் கொண்டிருக்கப் போவதில்லை. இயக்கங்கள் ஒன்றிணைவது என்ருல் அவை தத்தமது தனித்துவத்தை இழந்து சங்கமமாக வேண்டும் என்பதல்ல. இராணுவ ரீதியில் இயக்கங்கள் ஒருங்கிணைந்து பங்காற்றுவதே இன்றைய அவசரத் தேவை.

ஒரு நாளில் ஒரு இயக்கம் மட்டும் இராணுவ நட வடிக்கையொன்றில் ஈடுபடுவதும், பிறிதொருநாளிலே இயக்கம் பிறிதொரு ராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவதும், இன்னொரு நாளில் மற்றும் இன்னொரு இயக்கம் ஈடுபடுவதும் என்றிருக்காமல் ராணுவ நடவடிக்கைகளில் எல்லா இயக்கங் களும் ஒருங்கிணைந்து ஈடுபட்டால் எமது எதிரிகளை மேலும் பெரிய அளவில் நிலைகுலைந்து போகச் செய்வதுடன், நேச சக்திகளின் ஆதரவை மேலும் விரைவாகப் பெற்றுப் போராட்டத்தை வலுப்படுத்தித் தமிழ் ஈழத்தை மிக விரைவில் மீட்டெடுக்கவும் இது வழியமைத்துத் தரும் என்பது உறுதி.

எமது மக்கள்பால் உண்மையான அன்பும், பரிந் துணர்வும் இருக்கின்ற இயக்கங்கள் எல்லாம் பல்வேறு கருத்து வேறுபாடுகளையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, எமது மக்களைப் பேரழிவில் இருந்து காப் பாற்றும் ஒரே நோக்கத்திற்காக இன்றைய அவசரத் தேவையும் அவசியத் தேவையுமான 'ராணுவ ரீதியில் ஒருங்கிணைந்து செயலாற்றுதல்' என்ற எமது இந்த் வேண்டுகோளைச் செவிமடுத்துச் செயலாற்ற முன்வரும் என்று உறுதியாக நம்புகிறேம்.

ஆகவே தமிழ் ஈழ மக்களின் அபிலாஷைகளை தமிழ் ஈழத்தை வென்றெடுக்க, இந் நெருக்கடி காலத்திற்கு ஒவ்வாத செயல்களைக் கைவிட்டு எல்லா இயக்கங்களும் இராணுவ ரீதியாக ஒன்றுபட்டுப் போராட வேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

அரசியல் பேசிப் பேசி காலங்களை வீணுக்காமல் தமிழ்ப் பேசும் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து ஒட்டு மொத்தமான விடுதலைப் போராட்டத்திற்கு இராணுவ ரீதியாக ஒன்றுபடுமாறு வேண்டுகிறேம்.

## ஆதரவாளர்களுக்கு நன்றி

மக்களின் விடுதலையில் — தமிழ் ஈழ விடுதலையில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ள மக்களின் உதவி கரங்கள் விடு தலைப் போராட்டத்திற்கு மேலும் மேலும் ஊக்கம் அளித்துக் கொண்டிருக்கிறது. ஆதரவாளர்களின் தாராள பண உதவியினுல் தமிழ் ஈழ விடுதலை போராட்ட தயாரிப்பை ஒழுங்கமைக்க கூடியதாக இருக்கிறது. இவ் ஆதரவாளர்களின் உதவிக்கு தமிழ் ஈழ மக்கள் சார்பில் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேம்.

## ரெலோஸ் கேளின்...

ஏகாதிபத்தியம், இஸ்ரேலிய பொஷாட், தென்னுபிரிக்கா நிறவெறி அரசு போன்றவற்று டன் கூட்டுச் சேர்ந்து, அவர் களிடம் ஆலோசனைகளையும், நவீனரக ஆயுத உதவிகளையும் பெற்று தனது ஏவல் ராணு வத்தை இன ஒழிப்பு நடவடிக் கைகளுக்கு ஏவி விட்டுள்ளது.

இந்த இன வெறி அரசின் கூலிப்படைகள் தமிழ் ஈழப் பகு திகளில் கொலை, கொள்ளை, கற் பழிப்பு போன்ற கொடிய செயல் களில் ஈடுபட்டு அப்பாவித் தமிழ் பேசும் மக்களைத் தாங்கொணுத் துயரங்களுக்கு ஆளாக்கி வரு கிறது.

இத்தனை அட்டூழியங்களையும் தமிழ்ப் பேசும் மக்கள் என்ற ஒரே காரணத்திற்காக நடாத்திக் கொண்டிருக்கும் தரகு முதலாளித் துவ அரசு ஏராளமான இளைஞர் களையும், யுவதிகளையும் கைது செய்து சித்திரவதைகளை மேற் கொள்வது மட்டுமல்லாமல் பயங்கரவாதிகள் என்று பட்ட மும் சூட்டி விடுகிறது.

உலக ஏகாதிபத்தியத்திற்கும், இனவாதத்திற்கும் எதிரான எமது போராட்டத்தை பல நிலைகளில் தாக்க முன் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசு ராணுவம் தனது பயணங்களைப் பாதுகாப்பாக மேற்கொள்ள புகைவண்டியை நம்பியிருந்தது. இந்தத் தாக்குத லால்; அந்தத் தரைமார்க்கமான பாதுகாப்புப் பயண வழியும் தடை செய்யப்பட்டுவிட்டது.

ஏற்கனவே ரெலோ இயக்கத் தால் மேற்கொள்ளப்பட்ட பாரிய தாக்குதல்களான சாவ கச்சேரிப் போலீஸ் நிலையத் தகர்ப்பு, கைதடி கவச வண்டிகள், ட்றக் வண்டிகள் தகர்ப்பு சம்ப வங்களால், அதிர்ந்து நிலை குலைந்து போயிருந்த அதிகார அரசு, இந்த புகைவண்டித் தகர்ப்பு சம்பவத்தால் மேலும் கிலி கொண்டுள்ளது.

## அரச பயங்கர...

பேச்சு வார்த்தை நடத்தப்படும் என்றும் உரிய முறையில் விண் ணப்பிக்கப்படும் என்றும் கொழும்பு செய்தி அறிவித்தது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தில் (ரெலோ) அதிரடித் தாக்கு தல் களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறும் ஸ்ரீலங்கா அரசு தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தலைவர் மீது மக்கள் கொண் டுள்ள நம்பிக்கையை திசை திருப் பவே இத்தகைய உண்மைக்கு புறம்பான செய்திகளை வெளி யிட்டுக் கொண்டிருக்கிறது. அண்மையில் 20.11.84ல் நடத் தப்பட்ட சாவகச்சேரி போலீஸ் நிலைய தாக்குதலும், 19.1.85ல் ஸ்ரீலங்காவில் தமிழர் போராட் டம் ஆரம்பிக்கப் பட்ட காலம் முதல் நடத்தப்பட்ட தாக்குதல் களில் அதி தீவிரமான தாக்குத லான மாங்குளம் முருகண்டி பாதையில் ரயில் தகர்ப்பு சம்பவ மும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தாலேயே நடத்தப்பட்டது. இதில் 298 ராணுவத்தினர் கொல்லப்பட்டதும், அரசுக்கு 5 கோடி ரூபாய் நட்டம் ஏற் பட்டதும் குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ சபாரத்தினத்தை கைது செய்யாமலேயே ஆயுட்கால சிறைத் தண்டனை விதித்துள்ள ஸ்ரீலங்கா அரசு இப்போதும் கைது செய்யாமலேயே கைது செய்யப்பட்டுள்ளதாக விஷமப் பிரச்சாரம் செய்து வருகிறது.

தலைவர் ஸ்ரீ சபாரத்தினம் யாராலும் கைது செய்யப்பட வில்லை என்றும் தனது கடமை களில் வழமைபோல் சுறுசுறுப் பாக ஈடுபட்டுக் கொண்டிருக் கிறுர்
என்றும் தமிழ் ஈழ விடுதலை இயக் கம் உறுதியாக அறிவிக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



# மக்கள் போராட்டமும் கொரில்லா யுத்தமும்

"அனைத்துப் போராட்டங்களும் வர்க்கப் போராட்டங்களே" என்றார் வித்தகர் கார்ல் மார்க்ஸ். அதாவது வர்க்கங்கள் எப்போது தோன்றியதோ அன்றிலிருந்து போராட்டங்களும் ஆரம்பித்தன. அப்போது உலக மக்கள் சனத் தொகையானது இருபெரும் முகாம்களாக பிரிக்கப்பட்டு விட்டது. அதாவது ஒடுக்கும் வர்க்கம் ஒரு முகாமாகவும் — ஒடுக்கப்படும் வர்க்கம் இன்னொரு முகாமாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. ஆண்டானாக — நிலப்பிரபுவாக — முதலாளியாக வெவ்வேறு வடிவமெடுத்த ஒடுக்கும் வர்க்கத்திற்கு எதிராக எடுக்கப்பட்ட மக்களின் போராட்டமே இன்று உலகெங்கும் பரவலாக நடைபெறுகின்றன.

## போராட்ட வடிவங்கள்

இப்போராட்டங்களின் காலங்களும், நேரங்களும், தலைகளின் எண்ணிக்கைகளும் மாறுபடினும் இவையாவும் ஒடுக்குவோருக்கும் — ஒடுக்கப்படுவோருக்குமான போராட்டங்களே. உதாரணமாக இப்போராட்டங்களின் வடிவங்கள் லெபனானில் உள்நாட்டு யுத்தமாகவும் — பிரான்சில் வேலை நிறுத்தப் போராட்டமாகவும் — பிரேசிலில் தாங்க முடியாத கடன் தொல்லையாகவும் — — பாகிஸ்தானில் ஜியாவுல் அக்கிற்கு எதிரான போராட்டமாகவும் — பங்களாதேஷில் எட்சாத்திற்கு எதிரான போராட்டமாகவும் — பிலிப்பைன்சில் மாக்கோசுக்கு எதிரான போராட்டமாகவும் — இலங்கையில் தமிழ் ஈழப் போராட்டமாகவும் உருவெடுத்துள்ளது. இப்படியாக ஒடுக்கும் வர்க்கத்திற்கெதிரான போராட்டங்கள் உலகளாவிய ரீதியில் உக்கிரமடைந்து வருகின்றன.

## மக்கள் போராட்டம்

ஆளும் வர்க்கமானது அதாவது ஒடுக்கும் வர்க்கமானது தனது சுரண்டலை தொடர்ந்து வளப்படுத்தவும் — தனது உல்லாச உப்பரிகை வாழ்வை தொடர்ந்து மேம்படுத்தவும், உற்பத்தி சாதனங்களையும் — உற்பத்தி முறையையும் தன் கையில் வைத்திருக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறது. இந்நிலைமையானது சாத்தியப்பட வேண்டுமாயின், அவ்வர்க்கத்திற்கு ஒடுக்கு முறை தவிர்க்க முடியாத தொன்றாகி விடுகின்றது. இப்பிற்போக்கான உற்பத்தி முறை நிலவும் சமுதாய அமைப்பில் அதாவது ஒடுக்கும் வர்க்கம் ஆட்சி செலுத்தும் சமுதாய அமைப்பில், ஆளும் வர்க்கம் மிகச் சிறியதாகவும் பரந்துபட்ட மக்கள் மீது காட்டுமிராண்டித்தனமான ஒடுக்கு முறையை கட்டவிழ்த்து விடுவதாயும் இருக்கும்.

சமுதாய வளர்ச்சியை தடுத்து நிறுத்திவிட இப்பிற்போக்கான ஒடுக்குமுறையாளர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றனர். ஒடுக்குமுறைக்கு எதிராகவும், சமுதாய வளர்ச்சியை அதன் போக்கில் வளர்த்து விடுவதற்காகவும் மக்கள் நடத்தும் போராட்டங்கள் வெற்றி பெறுவது வரலாற்று உண்மையாகும். ஆளும் வர்க்கத்திடமிருந்து அதாவது ஒடுக்கும் வர்க்கத்திடமிருந்து ஆட்சியதிகாரத்தை பறித்தெடுப்பதற்காக ஒடுக்கப்பட்ட பரந்து பட்ட மக்களால் நடத்தப்படும் போராட்டங்களே முற்போக்கான மக்கள் போராட்டம் என்று அழைக்கப்படும்.

## ஒடுக்கு முறை சாதனங்கள்

இம் மக்கள் போராட்டத்தால் தாம் நிச்சயம் தோல்வியை தழுவிக் கொள்வோம் என்றுணர்ந்த ஆளும் வர்க்கமானது, தாம் ஒடுக்குவதை புரிந்து கொள்ளாதிருப்பதற்கும் — ஒடுக்குவோரை இனம் கண்டு கொள்ளாது இருப்பதற்கும் பல்வேறுபட்ட யுக்திகளை கையாளுகின்றது. முதலாளித்துவ ஆட்சியின் பொறி அமைப்புக்களில் ஏற்படுகின்ற அரசியல், பொருளாதார சீர்கேடுகளால் மக்கள் அதிருப்தி அடைகின்ற வேளைகளில் அவர்களின் கவனத்தை திசை திருப்பும் வகையில் அரசியல் சதுரங்க விளையாட்டுக்கள் நடத்தப்படுகின்றன. மக்களை ஒன்று சேர விடாமல் இன — மத — மொழி — பிரதேச ரீதியாக பிளவு படுத்துகின்றனர். மக்களை மந்தைகள் ஆக்குவதற்கு சீரழிந்த கலாச்சாரத்தை பரப்புகின்றனர். ஒடுக்கு முறையாளர்களின் வானொலி, தொலைக்காட்சி போன்றவைகளை தமது நலன்களுக்காக பயன் படுத்துகின்றனர். மக்கள் மத்தியில் தீவிர பிற்போக்கான பிரச்சாரங்களை மேற்கொள்கின்றனர். இக்காரணங்களால், ஒடுக்கப்படும் மக்கள் தாம் ஒடுக்குமுறைக்காகும் காரணங்களை நேரடியாகவும், உடனடியாகவும் புரிந்து கொள்ளாதிருக்கின்றனர்.

## கொரிலாப் போராட்டம்

ஒடுக்குமுறையை உணர்ந்தோரும், விழிப்படைந்தோரும் மக்களின் எழுச்சிக்காகவும் — மக்கள் போராட்டத்திற்காகவும் — போராட்டத்தை துரிதப்படுத்தும் வகையில் போராடுகின்றனர். இப்போராட்டத்தின் ஒரு பகுதியாகவே கொரில்லாப் போராட்டம் அமைகின்றது. கொரில்லாப் போராட்டமானது ஆள் எண்ணிக்கையிலும், ஆயுத பலத்திலும் கூடிய எதிரியை, ஆள் எண்ணிக்கையிலும் ஆயுத பலத்திலும் பலம் குறைந்த படை எதிர்பாராத தாக்குதல்களை நடத்தி எதிரிப்படைகளுக்கு பெரும் அழிவைக் கொடுப்பதாகும்.

## கொரில்லாப் போராட்டம் தவிர்க்க முடியாதது.

கொரில்லாப் போராட்டமானது இன்று, நேற்று உருவாகியதல்ல. மனித சமுதாயம் வர்க்கங்களாக பிரிந்த முதற் கொண்டே அதாவது சமுதாயம் ஆண்டான் அடிமையாக பிரிந்த முதலே கொரில்லாப் போராட்டம் ஆரம்பமாகியது. போராட்டம் நடாத்த சூழ்நிலைக்கு ஏற்ப மனிதன் போராட்ட வடிவங்களை உருவாக்கிக் கொண்டான். ரோம சாம்ராஜ்யத்தில் அடிமைகளின் கிளர்ச்சிக்கு தலைமை கொடுத்த ஸ்பாட்டகஸ் அடிமைகளின் கிளர்ச்சியில் கொரில்லாப் போரின் தன்மையுடைய போர் முறைகளை உபயோகித்திருப்பதை வரலாற்றில் நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

## கொரிலா வீரனின் பணி

கொரில்லா யுத்தம் பற்றிய கோட்பாடுகள் தோழர் லெனினினால் முன்வைக்கப்பட்டாலும், இதனை மேலும் செழுமைப் படுத்தி நடைமுறை அனுபவங்களை தொகுத்து முன்வைத்தார் தோழர் மாவோ. கொரில்லாப் போர் முறைகள் சீனவிலும் — வியத்நாமிலும் — ல்கியூபாவிலும் மிகச் சிறப்பான பலனைக் கொடுத்தன. ஏன் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திலும் — இன்று தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திலும் கொரில்லாப் போராட்டம் முக்கிய பங்கு வகிப்பதை நாம் காணலாம். தமிழ் ஈழத்தின் சமூக — பொருளாதார — பூகோள நிலைமையை கருத்திற் கொள்ளின் தமிழ் ஈழ தேச விடுதலைப் போராட்டத்திலும் கொரில்லாப் போராட்டம் என்பது தவிர்க்க முடியாத தொன்றாகிவிடுவதை நாம் காணலாம்.

## மக்களின் ஈடுபாடற்ற நிலை.

ஆனல் மக்கள் போராட்டத்தின் முதற் கட்டமே கொரில்லாப் போராட்டமாகும். கொரில்லாப் போராட்டமே மக்கள் போராட்டம் எனக் கருதுவதும், அதுவே போராட்டப்பாதை என கருதுவதும் பெரும் ஆபத்தை விளைவிக்கும்.

மக்களுடன் ஒன்று கலந்த நிலையில் விடுதலைப் போரில் அவர்களின் பங்கெடுப்பை ஊக்குவித்து விரிவாக்குவதே கொரில்லாப் போராட்ட காலங்களில் செய்ய வேண்டியதாகும். அதற்கு மாறாக, மக்களை விடுதலைப் போரில் ஈடுபடுத்தாது மக்களிடம் இருந்து அன்னியப்பட்டு இருப்பது கொரில்லாப் போராட்டமாகவோ அல்லது மக்கள் போராட்டமாகவோ இருக்க முடியாது. இப்படிக் கூறுபவர்கள், இப்படிப்பட்ட போராட்ட நடவடிக்கைகளை மேற் கொள்ளுபவர்கள் நிச்சயம் தோல்வியை தழுவிக் கொள்வார்கள். இங்கு இன்னும் ஒன்றையும் குறிப்பிட்டாக வேண்டும். மக்களின் ஆதரவு கிடைத்தால் மட்டும் மக்கள் போராட்டமாகிவிடாது. ஒடுக்கப்படும் வர்க்கத்திற்கு எதிராக மக்களின் ஆவேசம் இருக்கும் நிலையில் ஒடுக்கும் வர்க்கத்தின் மீது யார் தாக்குதல் நடத்தினாலும் (தனி நபராயினும்). மக்கள் ஆதரவு அளிக்கவே செய்வார்கள். இதை வைத்துக் கொண்டு இதுவே மக்கள் போராட்டம் என யாராயினும் கருதுவார்களாயின், அவர்களின் அரசியல் முதுகெலும்பற்ற தன்மையையே இங்கு காணுவதோடு, இப்படிப் பட்டவர்களின் போராட்டங்கள் விரைவில் ஒடுக்குமுறையாளர்களிடம் தோற்றுப் போவார்கள் அல்லது முற்ருக அழிக்கப் பட்டதையே வரலாற்றில் நாம் காணலாம்.

மக்கள் போராட்டத்தின் முதற் கட்டமான கொரில்லாப் போர்க்களத்தில் கொரிலாவுக்கு பெரும் அரசியல் பணி இருக்கிறது. கொரிலாப்படை என்பது ஓர் அரசியல் படையாகும். ஒரு கொரிலாவுக்கு அரசியல் என்பது தலைகீழான பாடமாகும். கொரிலாவுக்கு உயிர் அரசியல் என்ருல் உடல் தான் படை ஆகும். நாட்டுத் துப்பாக்கியையோ, குருவி சுடும் துப்பாக்கியையோ கூட கையிலெடுத்துச் சுடப்பழகுவதற்கு அல்லது நாட்டு கைக் குண்டை எறியத் தெரிந்து கொள்வதற்கு முன்பே ஒரு கொரில்லா பிறந்து விடுகிருன். விடுதலை அரசியலை கற்றுக் கொள்ளும் போதே அந்தக் கொரில்லா தோன்றி விடுகிருன். துப்பாக்கி எடுத்து போராடுகின்ற நேரம் ஒரு கொரிலாவுக்கு பாதி நேரம் மட்டுமே — வாழ்க்கையில். மறுபாதி நேரத்தில் அவனுடைய ஈடுபாடுகளெல்லாம் அரசியல் பணிகளை செய்வது தான். போகுமிடமெல்லாம் அமைப்புக்களை கட்டுவது, மக்களை அணிதிரட்டுவது, அவர்களை அரசியல் மயப்படுத்துவது, இனவெறிப் படைகளின் கொடுந்தாக்குதல்களிலிருந்தும், கொடுமைகளிலிருந்து தப்பவும், நசுக்கவும் வல்ல யுக்திகளை மக்களுக்கு சொல்லிக் கொடுப்பது, தேவைப்படும் நேரங்களிலெல்லாம் சட்ட படியான மக்கள் போராட்டங்களை வழி நடத்துவதற்கு வழி செய்வது, விடுதலைக் கருத்துக்களை பரப்புவது — விடுதலை இலக்கணமாம் மார்க்சிய அறிவை பரப்புவது போன்ற பணிகள் ஒரு கொரில்லாவின் அரசியல் பணிகளாகும்.

## தன்னெழுச்சியான போராட்டம்

இவ்வகையில், மக்களிடம் ஒன்றற கலந்துவிட்ட நிலையில் விடுதலைப் போரில் அவர்களின் பங்கெடுப்பை ஊக்குவித்து விரிவாக்குவதென்பதே மக்கள் போராட்டத்தில் உள்ளீடாக இருத்தல் வேண்டும். அதற்கு நேரெதிராக, விடுதலைப் போரில் மக்களை ஈடுபடுத்தாது ஒரு சில தனிக் கட்டைகளாய் காடுகளிலும் — மேடுகளிலும் துப்பாக்கியுடன் திரிகின்ற சிலர் தாங்கள் மக்களிடமிருந்து தனிமைப்பட்டுக் கிடக்கையில் தங்களை கொரிலாக்கள் என்று சொல்லிக் கொள்வார்களேயானுல், அவர்கள் நிச்சயம் தோற்கத்தான் செய்வார்கள். அவர்கள் நடத்துவதும் கொரில்லாப் போராட்டமாகவோ அல்லது மக்கள் போராட்டமாகவோ இருக்காது.

அஃது ஒரு படைநெறியமாகவே மட்டும் சீரழிந்து நிற்கும். விடுதலை நோக்கத்திற்கே ஒட்டு மொத்தத்தில் கேடு பயக்கும். இத்தகைய பிறழ்ச்சிக். கொள்கையை நிச்சயம் எதிர்க்கத்தான் வேண்டும்.

## முன்னணிப் படையின் பங்கு

அடக்கு முறையாளரின அதாவது ஆளப்படுவோரின் ஒடுக்குமுறைக் கொடுமைகள் உச்சக்கட்டத்தை அடையும் போது மக்கள் நிச்சயம் கிளர்ந்தெழவே செய்வார்கள். இவற்றை தன்னெழுச்சியான போராட்டம் என்றழைக்கப்படும். இத் தன்னெழுச்சியான போராட்டம் ஆழ்ந்த நோக்கற்ற வெறும் ஒடுக்குமுறை பற்றிய விளக்கமின்றிய நிலையில் ஓர் எதிர்ப்புக் காட்டும் போராட்டமாகவே இருக்கும். இதனுல் இப்படியான தன்னெழுச்சியான போராட்டங்கள் ஆளும் வர்க்கத்தால் அதாவது ஒடுக்கும் வர்க்கத்தால் விரைவில் வெற்றி கொள்ளப் பட்டு விடும் அல்லது அடக்கப் பட்டு விடும். இங்கு தான் கொரிலாக்களின் பணி அவசியமாகிறது. தன்னெழுச்சியான போராட்டத்தில் குதிக்கும் மக்களை சரியான திசை வழியே, சரியான இலக்கை நோக்கி வழி நடத்தி மக்களின் வெற்றியை உறுதி செய்யும் பொறுப்பு இக் கொரில்லாக்களின் கடமையாகும். இக் கொரில்லாக்களே மக்களை வழி நடத்தும் முன்னணிப் படையினராவர்.

இவ் முன்னணிப்படையானது எங்கிருந்தோ வந்து குதிப்பதல்ல. ஆரம்பகால கொரில்லாப் போராட்டங்களின் அனுபவங்களிலிருந்தே மக்களால் உருவாக்கப்படுகிறது. இவ் முன்னணிப் படையின் வழிகாட்டலில் மக்கள் போராட்டத்தில் ஈடுபடும் போது தான் அது குறிப்பிட்ட இலக்கை அடையும். முன்னணிப்படையின் தனித்த போராட்டமோ அல்லது முன்னணிப்படையற்ற மக்கள் போராட்டமோ வெற்றி பெற முடியாது.

முன்னணிப் படையானது புரட்சிகர தத்துவத்தால் ஆயுதமயமாக்கப்பட வேண்டும். புரட்சிகர தத்துவம் இல்லாமல் புரட்சிகர இயக்கம் இருக்க முடியாது. புரட்சிகர இயக்கத்தின் வழிகாட்டி, புரட்சிகர தத்துவம் என்னும் போது மக்களின் உண்மையான விடுதலைக்கு வழி வகுக்கும் தத்துவமே. இத் தத்துவததை நடைமுறையுடன் செயல்படுத்த வேண்டும். நடைமுறை அற்ற தத்துவமும் — தத்துவம் அற்ற நடைமுறையும் பயனளிக்காது என்ருர் மாமேதை தோழர் லெனின்.

முன்னணிப் படையானது மக்கள் மத்தியில் நன்கு வேரூன்றி மக்களை ஸ்தாபனப்படுத்துவது அவசியமாகும். ஏனெனில், மக்கள் போராட்டத்தை நடத்துபவர்கள் மக்களே. மக்களை போராட்டத்திற்கு தயார்படுத்துவதும் — மக்களை வழி நடத்துவதும் முன்

(5ம் பக்கம் பார்க்க)

> கொரில்லா யுத்தம் என்பது இன்றே, நேற்றே, ஆரம்பிக்கப்பட்டதொன்றல்ல. அப்படி நினைப்பது கொரில்லா யுத்தத்தின் முன்னோடிகளான மா.ஒ சேதுங், சே. குவேரா போன்ற புரட்சித் தலைவர்களைக் கொச்சைப் படுத்துவதாகவே இருக்கும்.
>
> —தலைவர் சிறி சபாரெத்தினம்

படிப்பகம்

www.padippakam.com



# பிரிட்டன் ஆயுத உதவி மறுப்பு

## சிறிலங்காவில் அமெரிக்கா உளவு மாளிகை

ஸ்ரீலங்கா தரகு-முதலாளித்துவ அரசின் அடக்குமுறைத் கொடுமைகள் தாங்காது, அவ் அரசின் கைப்பிடியில் இருந்து விடுபட்டு ஒரு சமவுடைமைத் தென்றல் வீசும் ஒரு தமிழ் ஈழ அரசை அமைப்பதற்கான பரந்துபட்ட முற்போக்கான மக்கள் போராட்டப் பாதையில் தமிழ் ஈழ மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இப் போராட்டங்களை ஒடுக்கும் நடவடிக்கைகளில், ஸ்ரீலங்கா சோவனிஸ அரசானது உலக ஏகாதிபத்திய எதிர்ப்புரட்சி சக்திகளின் — துணையுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

### போராட்டமும், அதன் தொடர்புகளும்

தமிழ் ஈழப் போராட்டமானது, இலங்கைக்குள் மாத்திரம் தன்னை வரையறுத்துக் கொள்ளவில்லை என்பது உலக மக்கள் அறிந்தவிடயமே. தமிழ் ஈழப் போராட்டமானது, சிங்களம் பேசும் மக்களின் விடுதலையுடன் தொடர்பு பட்டதும் — இலங்கையின் வர்க்கப் போராட்ட வளர்ச்சியுடன் தொடர்புபட்டதும் — உலக ஏகாதிபத்திய நாடுகளினதும் அதன் எடுபிடிநாடுகளினதும், இராணுவ — பொருளாதார வளங்களுள் இலங்கை உள்ளாவதுடன் நேரடியாக தொடர்பு பட்டதும்—இந்திய தேசத்தின் சுயாதிபத்திய பாதுகாப்புடன் தொடர்புபட்ட பிரச்சனையாகும்.

### சிறந்த ஊடகம் இனவாதம்

இலங்கையின் இன்றைய நிலைமையானது, தவிர்க்க முடியாதபடி ஸ்ரீலங்கா அரசை அமெரிக்க இராணுவ செல்வாக்கின் கீழ் உட்பட்ட ஓர் அரசாக மாற்றிக் கொண்டிருக்கிறது. ஏனெனில், இலங்கையின் பொருளாதாரத்திலும்—அரசியலிலும் மேலாதிக்க நிலை பெற்றுவிட்ட அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் செல்லப் பிள்ளைகளும் இலங்கை பிளவுபடுவதை விரும்பவில்லை. ஐக்கிய இலங்கையையே அவர்கள் விரும்புகிறார்கள். அதுவும் இலங்கையின்—தேசிய இனங்களின் சமத்துவத்தில் கட்டப்பட்ட ஐக்கிய இலங்கையை இவர்கள் விரும்பவில்லை மாறாக, 25%ற்கும் குறைவான சிங்கள பௌத்தர்கள் தவிர்த்த ஏனைய மக்கள் பிரிவினரின் சமூக, சமத்துவத்தை குழி தோண்டிப் புதைத்து அவர்களின் கல்லறைகள் மீது கட்டப்பட்ட ஐக்கிய இலங்கையயே இவர்கள் விரும்புகிறார்கள்.

ஒரு புறத்தில் சிங்கள பெரும்பான்மை மக்களிடம் வர்க்க சமரசத்தையும், தேசிய சரணாகதியையும் உருவாக்குவதற்கும் மறுபுறம் முழு மக்களுக்கும் எதிராக பாஸிஸத்தை பிரயோகிப்பதை சாத்தியமாக்குவதற்கும் சிங்கள இனவாதத்தைப் போன்று மிகச் சிறந்த ஒரு ஊடகத்தை இழப்பதற்கு இவர்கள் தயாராக இல்லை. இந் நிலைமையானது, தவிர்க்க முடியாதபடி ஸ்ரீலங்கா அரசை அமெரிக்க இராணுவ செல்வாக்கிற்கு உட்பட்ட அரசாக மாற்றுகிறது.

### அரசினரின் வெளிநாட்டு பயணம்

தமிழ் ஈழப் போராட்டமானது வெற்றிபெறும் பட்சத்தில்—தனது பாஸிஸ ஆட்சிக்கு இறுதிக்கட்டம் வந்துவிடும் என்றுணர்ந்த ஸ்ரீலங்கா தரகு-முதலாளித்துவ அரசானது, தனது முழுப் பலத்தையும் பிரயோகித்து தமிழ் ஈழப் போராட்டத்தை அடக்க முயன்று கொண்டிருக்கிறது. எங்கெல்லாமோ சிதறிக்கிடக்கின்ற ஏகாதிபத்திய எதிர்ப்புரட்சிகர சக்திகளை ஒன்று திரட்டுகிறது. ஸ்ரீலங்காவின் வெளிநாட்டுக் கடன் 600 மில். டொல்ரை தாண்டி விட்டது. 1985ல் துண்டு விழும் தொகை முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு அதாவது 2,300 கோடி ரூபாயை எட்டியுள்ளது. இனியும் வெளிநாட்டு கடன் கிடைக்க முடியாத நிலை உருவாகி விட்டது. இதனால் ஸ்ரீலங்கா உள்நாட்டு பாதுகாப்பு மந்திரி மாண்புமிகு லலித் அத்துலத்முதலி — இலங்கை. வெளிவிவகார மந்திரி மாண்புமிகு சாகுல் ஹமீத் ஆகியோர் நேரடியாகவே கடந்த மாதங்களில் பிச்சைப் பாத்திரங்களுடன் அமெரிக்கா—பிரிட்டன்—பிரான்ஸ் போன்ற ஏகாதிபத்திய நாடுகளுக்கு பயணமானார்கள்.

ஸ்ரீலங்கா உள்நாட்டு பாதுகாப்பு மந்திரி லலித் அத்துலத்முதலி அமெரிக்க வெளிவிவகார மந்திரி ஜார்ஜ் ஷுல்ட்ஸையும் — ஸ்ரீலங்கா வெளிவிவகார மந்திரி சாகுல் ஹமீது பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி ஸர்ஜியோப்ரீ ஹோவையையும் சந்தித்து ஆயுத உதவிபற்றி கெஞ்சினார்கள். தமிழ் ஈழப் போராட்டத்தால் இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலையை விளக்குவது—தமிழ் ஈழப் போராளிகளை அடக்குமாறு இந்தியா மீது, பிரிட்டன் அரசியல் நிர்ப்பந்தத்தை பிரயோகிக்க முன்வருமா என கண்டறிவது — ஸ்ரீலங்கா இராணுவத்தை வலுப்படுத்த ஆயுத உதவி கோருவது—ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு பயிற்சி அளிப்பதற்கான அதிகாரிகளை அனுப்பி வைக்கும்படி கேட்டல்—ஆகியவையே இலங்கை மந்திரிகளின் வெளிநாட்டு பயணத்தின் முக்கிய நோக்கங்களாகும். ஆனால் சகலவற்றிலும் ஏமாற்றத்துடனேயே நாடு திரும்பினர்.

1983—ல் ஸ்ரீலங்கா சோவனிஸ அரச படைகளில் தரைப்படைகள் 11,000 ஆகவும் — கடற்படை 2,960 ஆகவும் — விமானப்படை 2,600 ஆகவும் — இவற்றோடு 3,12 விமானங்கள் கொண்ட ஒரு விமானப் படையும் — மேலதிக தேவைகளுக்காக ஒரு படைத் தொகுதியும் கொண்டிருந்தது. ஆனால் இன்று தரைப் படை 16,000 ஆகவும் அத்தோடு ஒவ்வொரு மாதத்திற்கும் 2,000 புது தரைப்படை வீரர்களையும் தெரிவு செய்கிறது. பயிற்சிக் காலம் 4 மாதங்களிலிருந்து 8 வாரங்களாக குறைக்கப்பட்டுள்ளது. இதற்காகவே, இராணுவ செலவு 1983—ல் இருந்ததைப் போல ஐந்து மடங்காக்கப்பட்டுள்ளது. அதாவது 1983—ல் ஸ்ரீலங்காவின் பாதுகாப்பு செலவு 180 கோடி ரூபா ஆகவும் இம்முறை (1985) 900 கோடி ரூபாவாகவும் ஆக்கப்பட்டுள்ளது. இதன் மூலமும் தமிழ் ஈழப் போராட்டத்தை அடக்க முடியாததாலேயே அமைச்சர்களின் வெளிநாட்டு படையெடுப்பு.




### அமெரிக்கா உதவி

அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் 8,90,000,00 பவுண் மதிப்புக்கு ஆயுத உதவி ஸ்ரீலங்கா கோரியதாகவும் அமெரிக்கா மறுத்ததாகவும், ஆனால் 1,60,000 டொலர் ஆயுத உதவிக்கு அமெரிக்க நிர்வாகம் சம்மதித்ததாகவும் தெரிகிறது. பூகோள ரீதியாக ஏற்பட்டுள்ள கடன் பழு உலக ஏகாதிபத்தியத்திற்கு பிடித்த ஏழரை சனியன்களில் ஒன்றாகும். இதிலிருந்து அமெரிக்க ஏகாதிபத்தியமும் தப்பிக்க முடியவில்லை. ஆமாம்! எந்தவொரு ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடும் இந்த கடன் பழுவில் இருந்து தப்பிக்க முடியவில்லை. எனினும் அமெரிக்க ஏகாதிபத்தியமானது இந்து மகா சமுத்திர நாடுகளை சுரண்டுவதை கைவிட்டால் தான் குளோஸ்! என்பதை அறிந்தே ஸ்ரீலங்காவுக்கு 1,60,000 டொலர் இராணுவ உதவியை அளித்திருக்கிறது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

### பிரிட்டனின் நழுவல்

ஏகாதிபத்திய கடன் பழுவில் இருந்து பிரான்ஸ், பிரிட்டனும் தப்பிக்க முடியவில்லை. பிரிட்டன் இன்று ஐரோப்பிய பொதுச்சந்தை நாடுகளால் அடித்து துரத்தப்படும் நிலை. பிரிட்டனில் வேலை இல்லாத் திண்டாட்டம் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. இப்படியாக பொருளாதார நெருக்கடிகளில் சிக்கித் தவிக்கும் பிரிட்டன், பிரான்ஸ் போன்ற ஏகாதிபத்திய நாடுகள் ஆயுதங்களை மிரட்டி, உருட்டி விற்பனை செய்வதன் மூலமே தமது ஆட்சியை ஓரளவு கட்டிக் காக்கின்றன. பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் இந்தியாவுக்கே பெருமளவு ஆயுதங்களை விற்பனை செய்து தமது ஆட்சியை நிலை நிறுத்துகின்றன.

இப்படியாக பிரிட்டனானது இந்தியாவுக்கு ஆயுத சப்ளை செய்து தனது ஆட்சியை நிலை நிறுத்த முயன்று கொண்டிருக்கும் வேளையில் ஸ்ரீலங்கா வெளியுறவு மந்திரி சாகுல் ஹமீது பிரிட்டனிடம் ஆயுத உதவியும் — "தமிழ் ஈழப் போராளிகளை அடக்குமாறு" இந்தியா மீது, பிரிட்டன் அரசியல் நிர்ப்பந்தத்தை பிரயோகிக்கும்படி கேட்டிருந்தார். இவற்றிற்கு பிரிட்டன் அடியோடு மறுத்ததோடு, ஸ்ரீலங்கா அரசு, தமிழர் பிரச்சனையை பேச்சு வார்த்தை மூலம் தாங்களாக தீர்த்துக் கொள்ள வேண்டும் என பிரிட்டன் தெளிவு படுத்தியது. அத்தோடு மனித உரிமைகளை ஸ்ரீலங்கா அரசு மதித்து நடக்க வேண்டும் என்றும் கூறியது. இந்தியா மத்தியஸ்தம் செய்தால் தீர்வு ஏற்படலாம் என ஸ்ரீலங்கா கருதுமானால், ஸ்ரீலங்கா தலைவர்கள் அத்தகைய மத்தியஸ்த முயற்சியை மேற்கொள்ள இந்தியாவிடம் நேரடியாக கோரிக்கைவிட வேண்டும் எனவும் பிரிட்டன் கூறியது. ஆயுத உதவி அளிக்க இயலாது என்றும், ஆயுதங்களை வாங்குவதற்கும் நிதி உதவி அளிக்க இயலாது என்றும் பிரிட்டனானது ஸ்ரீலங்காவிடம் தெளிவுபடுத்தியது.

### மக்கள் சக்தி முன் ஆயுதம் பலன் இழப்பு

ஸ்ரீலங்காவுக்கு இது பலத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. ஸ்ரீலங்காவிடம் தற்போது 26 கடல் எல்லை ரோந்து படகுகளும் — 2 பெரிய கடல் எல்லை ரோந்துப் படகுகளும் உள்ளது. இஸ்ரேல் ஏகாதிபத்திய எடுபிடி நாடானது மேலும் 2 பெரிய கடல் எல்லை ரோந்துப் படகுகளை சப்ளை செய்தது. ஸ்ரீலங்கா விமானப் படையிடம் 12 ஹெலிக்கப்டர் விமானங்கள் உள்ளன. மிகி அண்மையில் ஒரு சிங்கப்பூர் நிறுவனம் மூலம் அமெரிக்காவில் தயாரான 12 நவீன ஹெலிக்கப்டரை ஸ்ரீலங்கா வாங்கியுள்ளது. ஸ்ரீலங்காவின் மேன்மை தங்கிய ஜனாதிபதி ஜெ.ஆர். ஜெயவர்த்தனா கடந்த மே மாதம் சீன சமூக — ஏகாதிபத்திய அரசுக்கு விஜயம் செய்த போது 5 கடல் எல்லைப் படகுகளுக்கு ஒப்பந்தம் செய்தார். ஏற்கனவே ஸ்ரீலங்காவிடம் 7 சீன நாட்டு கடல் எல்லை ரோந்துப் படகுகள் உள்ளன. இவற்றை கொண்டு கூட தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை

(9ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com















ரெலோஸ்டுகளினால் தகர்க்கப்பட்ட யாழ்தேவி ரயில்

# மக்கள் போராட்டம்

ணிப் படையினரின் முக்கிய கடமையாகும். அப்போதே போராட்டம் வெற்றி பெறும்.

## மக்கள் ராணுவம்

மக்கள் இயக்கத்திற்கு சொந்த இராணுவம் அவசியமாகும். ஆனால் இவ் மக்கள் இராணுவம் ஒடுக்கும் வர்க்கத்தின் கூலிப் படை இராணுவம் போல இருக்காது. ஒடுக்கும் வர்க்கமானது அதாவது ஆளும் வர்க்கமானது அரசியலுக்கும் கூலிப்படைகளுக்கும் இடையில் ஒரு பெரும் மதிலை கட்டி வைக்கிறது. எந்த ஒரு ஒடுக்கும் வர்க்கத்தின் கூலிப்படைக்கும் அரசியல் என்பது ஓர் ஏதேன் தோட்டத்துக் கனி. அதனால் அது தீண்டத் தகாதது. ஆனால் மக்கள் இராணுவத்திற்கும் கொரிலாப்படையைப் போலவே அரசியல் முக்கியமானது. இவ் மக்கள் இராணுவமானது மக்களின் இன்ப துன்பங்களில் கலந்து கொள்ளும். இராணுவமாக மக்களோடு மக்களாக செயலாற்றும். இம் மக்கள் இராணுவமே, மக்கள் போராட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதாகும். பிற்போக்காளரின் நுகத்தடியில் சிக்குண்டு கிடக்கும் அரசை தகர்த்தெறிந்து முற்போக்கான மக்கள் சர்வாதிகார அரசை நிர்மாணிப்பதும், அதனை பிற்போக்காளரின் கையில் இருந்து பாதுகாப்பதும் மக்கள் இராணுவமே.

## ஒடுக்கு முறை-யாளரின் பிற்போக்கான நிலை.

மக்கள் இராணுவத்தின் கடமையானது, முற்போக்கான மக்கள் சர்வாதிகார அரசை நிர்மாணித்த பின்னரும் முக்கிய பங்கை ஆற்றுகிறது. ஏனெனில் தோல்வி கண்ட பிற்போக்கானது தனது தோல்வியை ஒரு போதும் ஒப்புக் கொள்ளாது. பதுங்கியிருந்து தனது எதிர்ப் புரட்சி கலகங்களை நடத்திய வண்ணமே இருக்கும். இவற்றை முறியடிக்கவும், முற்போக்கான மக்கள் சர்வாதிகார அரசை பாதுகாப்பதும் மக்கள் இராணுவமே.

இன்று பூகோளத்தில் வெற்றி பெற்றுள்ள மக்கள் அரசுகளை பிற்போக்காளர்கள் எதிர்ப்பதை நாம் காண்கிறோம். நிக்கரகுவா — — கியூபா — வியத்நாம் — ஆப்கானிஸ்தான் — போன்ற நாடுகள் இதற்கு நல்ல உதாரணமாகும்.

## போராட்ட வெற்றி-யும் அதற்கான பாதையும்.

இன்று சர்வதேச ரீதியாக ஒடுக்குமுறையாளர்களின் பொருளாதாரக் கொள்கையினால் மக்கள் கொடுமைப் படுத்தப்படுகிறார்கள். இப்பொருளாதார நெருக்கடிகளை தீர்க்க ஒடுக்குமுறையாளரின் பொருளாதார விற்பனர்களாலேயே முடியாமல் போய்விட்டது. இதனை தீர்க்க திறனற்ற ஒடுக்குமுறையாளர்கள் ஒரு மூன்றாம் உலக மகாயுத்தத்திற்கான தயாரிப்புக்களை செய்வதையே காண்கிறோம். மனிதனின் ஆக்கத்திற்கு பயன் பட வேண்டிய மனித சக்திகள் இன்று மக்களின் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் அணுகுண்டுகளை தயாரிப்பதிலேயே பயன்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பது உலக ஒடுக்கப்பட்ட மக்கள் யாவரும் அறிந்த உண்மையே.

இப்படியாக, பிற்போக்கான ஆளும் வர்க்கமானது எங்கெல்லாமோ சிதறிக்கிடந்த சக்திகளை ஒன்று திரட்டி — மக்களை மிருகத்தனமான முறையில் அடக்கி, ஒடுக்கி தனது சுரண்டலையும், தனது உல்லாச உப்பரிகை வாழ்வையும் மேம்படுத்தி வருகின்றனர். இவ் கொடூரமான ஒடுக்குமுறையில் இருந்து ஒடுக்கப்பட்ட மக்கள் விடுபட வேண்டுமாயின், முற்போக்கான மக்கள் போராட்டப் பாதையில் போராடினால் மட்டுமே வெற்றியை அடைய முடியும். அதை விடுத்து, தனித்தனிக் கட்டைகளாய் போராடினால், போராடுகின்ற அவ் மக்களே அடிச்சுவடு இல்லாமல் அழிந்து போனதையே வரலாறு காட்டுகிறது.

எனவே, முற்போக்கான மக்கள் போராட்டமே பிற்போக்கான ஒடுக்கும் அரசை தகர்த்தெறியும். முற்போக்கான மக்கள் போராட்டமானது, விடுதலை இயக்கத்தின் தலைமையிலான பரந்துபட்ட மக்கள் போராட்டமே. மக்கள் சக்தியை எந்தவித சக்தியாலும் முறியடிக்க முடியாது என்பதனை இவ்வகையிலேயே நிரூபிக்க முடியும்.

**தவறான செய்திக்கு மறுப்பு**

**கிளிநொச்சி போலீஸ் நிலையத் தாக்குதல் தமிழீழ விடுதலை இயக்கம் நடத்தியதாக வெளி வந்த செய்தி தவறானது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

படிப்பகம்

# தமிழ் ஈழ தேசபிதா தங்கத்துரை

பிரித்தானிய அரசிடமிருந்து சிங்கள நிலப்பிரபுக்களிடம் கைமாற்றப்பட்ட ஆட்சியினல் சுதந்திரம் பெற்ற இலங்கை, முழுமையாக சுதந்திரம் கிடைத்து விட்டது என்று பெருமைப்படுவதில், யாதொன்றும் இல்லை.

ஆட்சி கைமாற்றப்பட்டதே ஒழிய, மக்களின் வாழ்க்கைத் தரமோ மாறவில்லை, மேலும், தமிழ் பேசும் மக்களின் நிலேயோ ஆட்சியாளர்களின் சுய நல போக்குகளினல், இலங்கையில் சிங்கள, தமிழ் இனங்களிடையே பகைமைக்கு வித்திட்டதே ஒழிய பெற்ற சுதந்திரத்தை இம்மக்கள் அனுபவிக்கத் தகுதியற்றவர்கள் ஆகிவிட்டனர்.

அக் காலம் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்திக் கொண்டிருந்த G.G. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ் காங்கிரசு கட்சியும், S.J.V. செல்வ நாயகம் தலைமையிலான தமிழரசுக் கட்சியும் சிங்கள மக்களை பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டிருந்த D.S. செனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேச கட்சியும், S.W.R.D. பண்டாரநாயக்க தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும், மற்றும் இடதுசாரி கட்சிகளும்; வாக்கு வேட்டையை கைக் கொண்டு பாராளுமன்ற கதிரைகளை இடம் பிடிக்க முனைந்து செயல்பட்டனரே ஒழிய, இலங்கை மக்களின் வளமான வாழ்வுக்காக பாடுபட்டனரா? என்றல் நிச்சயமாக இல்லை.

அவர்களின் பதவி மோகம் காரணமாக, சிங்கள மக்களை பிரதிநிதித்துவப் படுத்திக் கொண்டிருந்த கட்சிகள் ஒரு பக்கம் இனவாதத்தையும், தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்திய கட்சிகள் ஒரு பக்கம் இனவாதத்தையும், தூண்டி விடுவதற்கே காரணமாக இருந்தனர்.

இப் பூர்ஷ்வா தன்மை உள்ள பிரபுத்துவ அரசியல் வாதிகளினல், மக்கள் நலன் கருதா தன்மையினல், இலங்கையின் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்கள் நாளுக்கு நாள் ஒடுக்குமுறையாளர்களின் கைகளுக்குள் சிக்குண்டு துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளனர்.

இரு இனங்களிடையே ஆன பகைமையை, மேலும் மேலும் வலுப்படுத்தவே அரசு இயந்திரம் துணைபோனதே அன்றி, சீர்படுத்த முனையவில்லை.

நாளும் முரண்பட்டுக் கொண்டிருக்கும் நிலையை தீர்ப்பதற்காக அதாவது தீர்வாக தமிழ் ஈழம் பெறுவதே ஒரே வழி என தீர்க்கமுற உணர்ந்து அதற்கான செயல் பாட்டில் வித்திட்டவர் தான் தங்கத்துரை என்ற மாமனிதர் அவர்.

காலம் காலமாக திரண்டு எழுந்திருந்த பிரச்சனைகளுக்கு, தமிழ் தலைமைகளின் விட்டேற்றியான போக்கினல் தமிழ் மக்களுக்கான தீர்வு சரியாக உருவாக்கப்படாதவிடத்து, தமிழ் மக்களுக்கென முழுமையான, தீர்வாகவும், ஒரே தீர்வாகவும் தமிழ் ஈழம் அமைப்பதையும், அதற்கான ஒரே வழி மக்கள் ஆயுதப் போராட்டம் என்பதையும் முதல் முதலாக வரையறுத்தவர் இவரே ஆவார்.

அவர் தனது தீர்வை வெறுமனே விட்டு விடாது முழுமூச்சாக செயலில் இறங்கியதன் விளைவே "தமிழ் ஈழ விடுதலை இயக்கம்" (1969) பரிணமித்தது.

"புரட்சிகர தத்துவம்
இல்லாமல்
புரட்சிகர இயக்கம் இருக்க
முடியாது"
—லெனின்

மக்களின் முழுமையான விடுதலையை கருத்தில் கொண்டு புரட்சிகர தத்துவத்துடன் கூடிய புரட்சிகர இயக்கமாக தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தை உருவாக்கியவரே தமிழ் ஈழ மக்களை கொள்ளை கொண்டுள்ள தங்கத்துரை ஆவார். இவர் வெறுமனேயே ஆயுதப் போராட்டத்தில் குதித்தவருமல்லர். தமிழ் தலைமைகளினல் நடத்தப்பட்ட சத்தியாக்கிரக போராட்டங்களில் ஆரம்ப காலங்களில் பங்கு பற்றி, அவர்களின் போராட்டங்கள் "புஸ்" வாணமாக போனதை நேரடியாக கண்டு, தமிழ் பேசும் மக்களின் விடுதலையை தனது முழுச் சிந்தனையாக கொண்டு, தீர்க்கமான அறிவின் மூலம் விடுதலைக்கான போராட்ட வழி மக்கள் ஆயுதப் போராட்டமே, என நெறிப் படுத்தினர்.

அவர் தனது இயக்க செயற்பாடுகளை நடைமுறைக்கு கொண்டு வரும் போது அன்று இருந்த தமிழ் தலைமைகள் உருவாக்கியிருந்த பிரச்சனைகளுக்கெல்லாம் முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்.

பாராளுமன்ற நம்பிக்கையின் மூலம் எதையும் சாதித்து விடலாம் என எண்ணிக் கொண்டிருந்த அக் காலம் இந் நம்பிக்கை முறையான பயன் தராது, ஆயுதப் போராட்டமே சரியான தீர்வு என்பதை மக்களுக்கு எடுத்துரைத்து புதிய புரட்சிகர நிலமையை தோற்றுவித்து அதை சரி வர பயன் படுத்துவதற்காக கடுமையாக உழைத்து விடுதலைக்காக இயக்கத்தை கட்டியமைத்து வளர்க்கும் போது எழும் பிரச்சனைகளை தீர்க்கமாக ஆராய்ந்து தமிழ் மக்களின் விடுதலைக்காக புரட்சி கொள்கையுடன் கூடிய புரட்சிகர இயக்கத்தை நெறிப் படுத்தி, புரட்சிகரமான செயற்பாடுகளை விஸ்தாரம் செய்தவராவர்.

வரலாற்றுப் போக்கில் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்கு ஒழுங்கான தீர்வை தமிழ் தலைமைகள் முன் வைக்காதவிடத்தும், தமிழ் தலைமைகளுக்கு இடையேயான கருத்து வேறுபாடுகளினலும் பிரிந்து இருந்து சரியான வழி நடத்தலுக்கு தமிழ் பேசும் மக்களை உட்படுத்தாதவிடத்தும், தலைமையின் அவசியத்தை உணர்ந்து தலைமை நெருக்கடிக்கு தீர்வு வைத்தார்.

மக்கள் ஆயுதப் போராட்டத்திற்கு முன்னணி வகிக்க ஒழுங்கான ராணுவ அமைப்பானது கட்டி அமைக்க வேண்டும். அதை, இன்றே தொடங்க வேண்டும் என்றும், அனுபவம் குறைவு என்று தட்டிக் கழிக்காமல் தனது அறிகை புலத்திற்கு எட்டியவரையில், தமிழ் மக்களுக்கென ராணுவ அமைப்பை முதன் முதலாகக் கட்டியமைத்த பெருமை இவரையே சாரும்.

இவர் 71 இல் நடந்த தரைப் படுத்தலுக்கு எதிரான மாணவர் ஊர்வலத்தின் கடைசி நேர கூட்டத்தில் பேசும் போது மக்கள் ஆயுத போராட்டத்தின் அவசியத்தையும் அதற்கு முன்னணி வகிக்கும் ராணுவ அமைப்பு பற்றியும் வலியுறுத்தி தெளிவாக தமது கருத்துரை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இம் மாமனிதரின் அரசியல் நிலைப்பாடானது சளப்பலோ, சமாளிப்போ இல்லாதது. அவர் தனது கருத்துக்களை முன் வைப்பதில் சிறு தயக்கமேனும் காட்டியதில்லை. அவரின் இறுதியானதும் அறுதியானதுமான முடிவானது வெட்டு ஒன்று துண்டு இரண்டு போன்றது.

மாவட்ட அபிவிருத்தி சபை பற்றி தனது கருத்துரை வழங்கும் போது, இச் சபையினல் தமிழ் மக்களுக்கு எது வித பிரயோசனமுமில்லை. இது ஒரு செப்படி வித்தையே அன்றி, வேறல்ல. இதை ஏற்கவே கூடாது, என்று கூறியதுடன் அதை எதிர்க்கும் முகமாகவும், மக்களுக்கு தனது நிலைப்பாட்டை விளங்கப்படுத்தும் நோக்குடனும் உடுவில் M.P. தர்மலிங்கத்தின் அரச சலுகையான ஜீப் வண்டியை எரித்தார். மேலும், உடுப்பிட்டி தொகுதியில் சிறுபான்மை தமிழரான இராசலிங்கம் கூட்டணி சார்பாக போட்டியிட்ட போது வல்வெட்டித்துறையில் கனகராசாவிதானையர் என பெயர் கொண்ட U.N.P. ஏஜன்ட் ஒருவர் U.N.P. சார்பாக தேர்தல் கேட்க இருந்ததை அறிந்த தங்கத்துரை, தானே கனகராசாவிடம் நேரில் சென்று U.N.P., S.L.F.P தவிர வெறெந்த கட்சியிலும் போட்டியிடலாம். ஆனல், U.N.P, S.L.F.P சார்பில் போட்டியிடுவோர் வாபஸ் வாங்காது போனல் சுட்டுத் தள்ளுவோம் என்றதும் இராசலிங்கத்தின் குழுவை எப்படியும் பாது காப்போம் என்றதுமே சாதி வெறியர்கள் மத்தியிலும் கூட்டணியினர் பிரச்சாரம் செய்யக்கூடியதாக இருந்ததுடன் இராசலிங்கத்தின் வெற்றிக்கும் வித்திடக் கூடியதாகவும் இருந்தது.

வறிய குடும்பம் ஒன்றில் தோன்றி வறிய நிலையில் எளிமையாக வாழ்ந்து வந்தவர். தமிழ் பேசும் மக்களின் சிந்தனையையே முற்றிலுமாகக் கொண்டு இனத் துரோகிகளினல்



காட்டிக் கொடுக்கப்பட்டு 'தனது தோழர்களான தளபதி குட்டிமணி, தேவன், ஆகியோருடன் பிடிபட்டு சிறிலங்கா இனவெறியாளர்களின் கொடுமையான சிறையில் பல வித கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டார்.

அங்கு இவரிடம் சிறிலங்கா அரசு நிபந்தனையுடன் கூடிய விடுதலையுடன் வெளி நாட்டுக்குச் சென்று வாழ்வதி செய்து தரப்படும், இங்கு திரும்பி வரவே கூடாது. ஒரு நிஜ விடுதலைப் போராளியிடம் எப்படியெல்லாம் பேரம் பேச முடியுமோ அப்படியெல்லாம் பேரம் பேசிப் பார்த்தார்கள். ஆனல் அவரின் உருக்கு போன்ற நெஞ்சம் தமிழ் பேசும் மக்கள் மீது உள்ள ஆழ்ந்த பற்றுதலும் காரணமாக இவ்வன்முறையாளர்களின் பேரங்கள் புறக்குடத்தில் ஊற்றிய நீர் போலாகிவிட்டது.

இவர் தனது சிந்தனையை என்றுமே குறுகிய நோக்கில் வைத்துக் கொண்டவரல்லர். அவர் தமிழ் பேசும் மக்களின் மேல் மட்டும் தனது பார்வையை வைத்துக் கொள்ளாமல், எல்லா அடக்கப்படும் மக்கள் மேலும் 'தனது தீர்க்கமான பார்வையை செலுத்தியுள்ளார்.

இவர் மேல் பயங்கர குற்றச் சாட்டுகளைச் சுமத்தி நீதி மன்றத்தில் நிறுத்திய போது—

"எமது நோக்கு மிக விசாலமானது.

"ஆபிரிக்க கண்டம் என்றல் என்ன? லத்தீன் அமெரிக்கா நாடு என்றல் என்ன? எங்கெங்கு அடக்கி ஒடுக்கப்படும் மக்கள் வாழ்கின்றர்களோ அங்கெல்லாம் அவர்களின் விடுதலைக்காக போராடும் நோக்கத்தையும் உள்ளடங்கியது. அப்படி இருக்கையில் எமது சகதேசத்தவரான மக்களின், குறிப்பாக சிங்கள மக்களின் நலன் அதற்குள் அடங்காது எப்படிப் போகும்."

—என்று முழங்கினர்.

அவரின் தீர்க்கதரிசன மிக்க பார்வையும் அடக்கப்படும் மக்கள் மேல் உள்ள ஆழ்ந்த பற்றும் இவ்வுரையிலிருந்து தீர்க்கமாகவே புலப்படுகின்றது. அவர் என்றுமே, சிங்கள மக்களை தனது எதிரியாகக் கொண்டவரல்லர்.

மேலும் தனது உரையில்.

"நாம் கோருவது விடுதலையையே அன்றி துண்டாடல் அல்ல. இதனை நாம் கோருவது நிச்சயம் குறுகிய மனப்பான்மையான செய்கையன்று. இதை நாம் பெறுவதன் மூலம் எமது இலட்சியம் மட்டுமல்ல நிறைவேறுவது — சிங்கள மக்களுக்கும் பெரும் நன்மையைச் செய்தவர்களாவோம். காரணம் அதன் பின் இனப் பிரச்சனையைச் பூதாகாரமாக்கி அரசியல் பிழைப்பு நடத்தல் என்பது சிங்கள மக்கள் மத்தியில் எடுபடாது. இதனல் சிங்கள மக்கள் மொழி தவிர்ந்த ஏனைய விஷயங்களில் அடிமைப் படுத்தப் பட்டிருக்கும் நிலையை பூரணமாக உணரவும், தமக்கு உண்டான அரசியல் பொரு

(8ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



# மலையகம்- புரட்சி சக்திகள்

தமிழ் ஈழப் போராட்டமானது முதிர்ச்சி அடைந்து வரும் இக்கால கட்டத்தில் ஒட்டு மொத்தமான தமிழ் பேசும் மக்களின் வலுவான போராட்டத்தினுலேயே தமிழ் பேசும் மக்களின் விடுதலையை — தமிழ் ஈழத்தை பெற்றுக் கொள்வது சாத்தியமாகும்.

## ஒடுக்கு-முறைகள்

சிறிலங்கா இனவெறி அரசினுல் ஒடுக்குமுறைக்கு உள்ளாகி உள்ள தமிழ் பேசும் மக்கள் விழிப்புணர்வு அடைந்து தங்களின் விடுதலைக்காக தங்கள் பங்களிப்பை வழங்க போராட்ட களத்தில் இறங்கி உள்ளனர்.

இவ் அடக்குமுறை பிரயோகிக்கும் சிறிலங்கா பேரின வாத அரசினுல் மேன் மேலும் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டவர்களும், உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருப்பவர்களும் யார் என்று நோக்கினுல் அதற்கு தகுதி உடையவர்கள் மலையக மக்களே ஆவர்.

பல கஷ்டங்களை அனுபவித்து தங்கள் வாழ்வு சிறக்கும் என்ற நம்பிக்கையில் நாடு விட்டு நாடு வந்த இவர்கள் மனித காலடி படாத காடுகளை எல்லாம் களனிகள் ஆக மாற்றி — தேயிலை தோட்டங்கள் ஆக்கி. தங்கள் உதிரத்தை வியர்வை ஆக்கி உடலை அம் மண்ணுக்கு உரமாக்கி இலங்கையின் அந்நிய செலவாணியில் முக்கால் பங்கை சம்பாதித்து கொடுத்துக் கொண்டிருப்பவர்கள் இன்றும் அதே நிலையில் எதுவித முன்னேற்றுமுமின்றி அரசினுல் நசுக்கப்பட்டு கொண்டிருப்பவர்கள் தான் மலையக மக்கள்.

தேயிலை தோட்டங்களில் அதீத உழைப்பை வழங்கி இலங்கையின் பண வருவாயை உயர்த்திக் கொண்டிருக்கும் இம் மக்களுக்கோ சரியான வருவாய் இன்றி ஒழுங்கான உணவின்றி, சாதாரண கல்வி அறிவின்றி நித்தம் உழைத்தும் ஓடாகிப்போன நிலையிலேயே உள்ளனர்.

## புரட்சி சக்திகள்

சிறி லங்கா இனவெறி அரசோ இவ் உழைப்பாளர்களுக்கு வழங்கிய பரிசு யாதெனில் நாடற்றவர்கள் என முத்திரை குத்தியதும், அவர்கள் வளமாக்கிய பூமியை விட்டு விரட்டிக் கொண்டிருப்பதுமே ஆகும்.

இலங்கையின் பாட்டாளி மக்களான இவர்கள் அரசுக்கு எதிராக பல போராட்டங்களை முன்னெடுத்த பெரும் புரட்சி சக்திகளாக உருவாகி உள்ளனர் என்றுல் மிகையாகாது. அரசுக்கு எதிராக மலையக மக்களால் எடுக்கப்படும் வேலை நிறுத்த போராட்டமானது பலமுறை அரசுக்கு பெரும் தலையிடியையும், பெருமளவு பண வருவாயை நஸ்டப்படுத்தியும் ஏன்? அரசே ஸ்தம்பிதம் அடையக் கூடிய அளவுக்கு உறுதியாக முன்னெடுத்தவர்களே இந்த புரட்சி சக்திகள்.

ஆனுல் இவர்களை போராட்ட காலங்களில் பிரதிநிதித்துவப்படுத்திக்கொண்டிருந்த தொழிற் சங்க தலைமைகளின் துரோகத்தனமே இவர்களது உறுதியான போராட்டத்தை முறியடித்ததாகும்

தங்கள் சுய நலத்தை பேணுவதிலேயே கண்ணும் கருத்துமாக செயல்படும் இத்தலைமைகள் இவர்களின் வாக்குகளினுல் பாராளுமன்ற கதிரைகளை அலங்கரித்துக் கொண்டும் இவர்களது உழைப்பிலேயே வயிற்றை வளர்த்துக் கொண்டும் செயல் பட்டுக் கொண்டிருப்பது வெளிப்படையாகும்.

தமிழ் பேசும் மக்களுக்கெதிராக இனவாத கருத்துக்களை தூவி இனவெறியை தூண்டி இன படுகொலையை நடத்திக் கொண்டிருக்கும் இச் சிறி லங்கா பேரின வாத அரசினுல் காலத்துக்கு காலம் தூண்டப்படும் —— இனக் கலவரங்களினுல் உளவு ரீதியாகவும், உடல் ரீதியாகவும் அதீத கஷ்டங்களை சந்திப்பவர்கள் மலையக மக்களே ஆவர்.

கல்வி அறிவு கிடைக்க பெற்றின் அவர்களின் நிலை உயர்ந்து விடுமோ என அஞ்சி அவர்களை அறிவு பூச்சியமாக வைத்திருக்கும் சிறி லங்கா அரசு தான் ஒரு மக்கள் காப்பாளராக காட்டிக் கொள்ள மலையக பிரதேசங்களில் சிறு சிறு பாடசாலைகளை தொடக்கி ஒழுங்கான வசதியற்ற நிலையில் வைத்து கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சிங்கள மக்களிடையே இனவாதமானது ஆழமாக புரையோடி இக்கால கட்டத்தில் மலையக மக்களின் விடிவானது தமிழ் ஈழம் பரிணமிப்பதிலேயே சாத்தியமாகும் அன்றி இம் மக்களை பிரதி நிதித்துவப்படுத்தும் தொழிற் சங்கங்களும் அரசியல் கட்சிகளும் இம் மக்களுக்கு ஒரு போதும் வளமான வாழ்வை தராது.

அரசின் கொடுமைகளினுல் புடம் போட்டு எடுத்த புரட்சி சக்திகள் ஆன இவர்களே தமிழ் ஈழ போராட்டத்தில் உண்மையான கதாநாயகர்கள் ஆவர்.

முதலாளித்துவ அரசின் பிரித்தாளும் சூழ்ச்சியால் பிளவுண்டு கிடக்கும் தமிழ் பேசும் மக்கள் இன்னமும் இத் தந்திரங்களுக்கு பலியாகிக் கொண்டிருப்பது கவலைக் குரியதாகும்.

மக்களிடையே போராட்ட வலு உருப்பெற்று முன்னேறிக் கொண்டிருக்கும் இக்காலத்தில் ஒட்டு மொத்தமான விடுதலையை முன்னேடுக்க இன வாத அரசின் சூழ்ச்சிகளையும் முதலாளித்துவத்தின் வலிய சக்தியையும் உடைத்தெறிந்து சோஷலிச தமிழ் ஈழம் அமைக்க மக்கள் ஆயுத போராட்டத்தில் தீர்க்கமான சிந்தனையுடன் முழுமையான பங்களிப்பை வழங்குவதே சாலச் சிறந்ததாகும்.

# பூமியின் நெற்றியில் இரத்தப் பொட்டு



●

சிந்திய
ஒவ்வொரு துளி இரத்தமும்
எங்கள்
தோழர்களின் முகங்களைப்
பிரதிபலிக்கும்.

அந்தச் சமயங்களிளெல்லாம்
பூமி நெற்றி
இரத்தப் பொட்டை
இட்டுக் கொள்ளும்.

ஏதாவொரு துப்பாக்கியிலிருந்து
மார்பு, முதுகு
இப்படி
வித்யாசமின்றிப் பாயும்.

உங்கள் படைகள்
'லா' அண்ட் 'அர்டர்' மட்டும்
வேதமாய் ஏற்று
நன்றி விசுவாசமாய்
துப்பாக்கியில்
குரல்களெழுப்பும்.

ஒவ்வொரு சுவாசிப்பும்
எம்மக்களின்
எரிந்து புகைந்த
கரிய வாடையை நினைவுறுத்தும்.

சரிந்து கிடக்கும்
கற்சுவர்களின் மேல்
சதையுரிக்கும்
'கழுகு'க் கூட்டம்
உங்களை ஞாபகமூட்டும்.

வீட்டுச் சுவர்களில் தெறித்த்
இரத்தத் துளிகள்
கண்களில் பதிகையில்
கைகள் தானுய்
துப்பாக்கிகளை
இறுகப் பற்றும்.

ஒவ்வொரு போராட்ட வரலாறும்
எங்கள்
பயணத்திற்கு வழி காட்டும்.

உங்களின் 'ரவை'கள்
எங்கள் சகாக்களின்
சரீரத்தை மட்டுமே
சாய்க்க முடியும்,
——லட்சியத்தை.

●

கடைசியாய்
பூமி நெற்றி
இரத்தத்தில்
பொட்டு வைத்துக் கொள்ளும்.

தேசத்தின்
வயல்களெங்கும்
இரத்த ஆறு பாயும்.

ஆனுல்...
அந்த இரத்தம்
எங்களுடையதாயிருக்காது.
——நிச்சயமாக.

——பாரதி வண்ணன்,
ஈரோடு.

## எழுச்சி

**ஆண்டுச் சந்தா 25/—**

தமிழ் பேசும் மக்களின் நிலையையும், அனைத்து ஒடுக்கப்படும் மக்களின் நிலையையும், தமிழ் ஈழ போராட்டத்தை வலுப்படுத்தும் வகையிலும், தமிழ் ஈழப்போராட்டத்தை பின்னோக்கி நகர்த்த முயலும் பிற்போக்கு சக்திகளை மக்களுக்கு இனங்காட்டிக் கொள்ளும் வகையிலும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் தனது உத்தியோக பூர்வ ஏடாக ''எழுச்சி''யை வெளியிட்டு வருகின்றது

இப் பத்திரிகைக்கு முற்போக்கான ஆக்கங்கள், கவிதைகள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப் படுகிறது. ஆக்கங்கள், கவிதைகள் திருத்தும் உரிமை பத்திரிகைக் குழுவினர்களுக்கு உண்டு.

(தொடர்புகட்கு)

நிர்வாகி
பத்திரிகைக்குழு

இரா. தமிழ்ச் செல்வன்
35/3 வெல்கம் காலனி
அண்ணாநகர் மேற்கு
சென்னை — 600 040

## பத்திரிகைத் தணிக்கை

சிறிலங்கா அரசு தமிழ் பேசும் மக்கள் மீது தனது ராணுவத்தை கட்டவிழ்த்து விட்டு நாளும் ஈனத்தன்மாக படு கொலைகளை துரிதப்படுத்திக் கொண்டு வருகிறது. இவ் இன ஒழிப்பு நடவடிக்கைகள் அம்பலத்திற்கு வராமல் தடுக்கும் நோக்கில் சகல தடுப்பு சாதனங்களையும் பயன் படுத்தி செய்திகள் வெளியில் வராமல் கட்டுப் படுத்துகிறது. இதன் எதிரொலியாக பத்திரிகை தணிக்கையை அமுல் படுத்தியுள்ளது. மேலும் — வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் செய்தியாளர்களை கண்காணிப்புக்கு உட்படுத்தியுள்ளதுடன் அவர்கள் தமிழ் ஈழப் பகுதிகளில் வன்முறை சம்பவங்களால் நடந்த இடங்களை பார்வையிட்டு புகைப்படங்கள் எடுக்கும் பட்சத்திலும் ஆங்காங்கே சில விசாரணைகள் நடத்தினுலும் அவர்களை அரசின் உளவாளிகள் கைது செய்து தீவிர விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றது. அண்மையில் இங்கிலாந்திலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த செய்தி நிருபர்கள் மூன்று பேர் அரசு உளவு படையால் கைதியாக்கப்பட்டு கொழும்பு நகரில் வைத்து விசாரிக்கப்படுகின்றனர்.

## தமிழ் ஈழப் போராட்டத்தை நசுக்க இந்தோனிசியாவுடனும் கூட்டு

இந்தோனேசியாவின் வெளி விவகார அமைச்சர் டாக்டர் முக்கார் குசுமத்மாஜா இலங்கைக்கு மூன்று நாள் நல்லெண்ண விஜயம் மேற் கொண்டிருந்த போது இலங்கை வெளி விவகார அமைச்சர் ஜனாப் ஏ.சி.எஸ். ஹமீத் திடம் இலங்கையில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு இந்தோனேசிய அரசாங்கம் பூரண ஒத்துழைப்பு நல்கும் என பகன்று சென்றுள்ளார்.

## இனவெறியர்களின் கொலை வெறிக்கு பலியான மீனவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி

சிறிலங்கா அரச கூலிகள் அத்துமீறி இந்திய கடற்பிரதேசத்தினுள் புகுந்து சுட்டுக் கொலை செய்த இந்திய — தமிழக மீனவர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் தமிழ்ழ விடுதலை இயக்கம் தனது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



# சிறிலங்கா ராணுவ கெடுபிடிக்குள் தமிழக மீனவர்கள்

ஸ்ரீலங்கா தரகு — முதலாளித்துவ அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக, தமிழ் ஈழ மக்கள் போராட்டம் உக்கிரமடைந்து வரும் இவ்வேளையில் இப்போராட்டங்களை எதிர்கொள்ள திறனற்ற UNP அரசானது உலக எதிர்ப் புரட்சிகளின் துணையுடன் தமது சூழ்ச்சித் திட்டங்களை வகுத்து அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராக மனித வதைகளை புதுப் புது வடிவில் செயல்ப்படுத்திக் கொண்டிருக்கிறது.

## இனவெறி அரசின் நடவடிக்கைகள்

இவற்றின் பிரதிபலிப்புகள் தான் CIA - MOSAD - SAS - SRI LANKA ARMY என ஏகாதிபத்தியமும், அதன் ஏவல் நாய்களும் கூட்டுச் சேர்ந்து செய்துவரும் கொடுமைகள். தமிழ் ஈழ நகரங்கள் எரியூட்டப்படுகின்றன —— — தமிழ் இளைஞர்கள் பெருந்தொகையாக கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்படுகிறார்கள் —— வட பகுதியில் பாடசாலைகள் இல்லை — — வங்கிகள் இல்லை —— பஸ் சேவைகள் இல்லை —— இப்படியாக அடக்கு முறையாளரின் கொடுமைகள் இரத்தச் சிதறல்களாக விஸ்தரிக்கப்படுகின்றன.

ஆனால் உலக எதிர்ப் புரட்சி சக்திகளின் துணையுடன் செயல்படும் UNP அரசு படைகளை தமிழ் ஈழப் போராளிகள் கதிகலங்க வைப்பதால், தமிழ் ஈழப் போராட்டம் வெற்றி கிடைக்கும் பட்சத்தில் தனது நவ பாஸிஸ ஆட்சிக்கு இறுதிக் கட்டம் ஆரம்பித்துவிடும் என்பதும் — தமிழ் ஈழ மக்கள் விடுதலை பெறுவதன் மூலம் சிங்கள மக்களும் தமது விடுதலைக்காக தங்கள் அரசுடன் போரிட ஆரம்பிப்பார்கள் என்பதையும் நன்கு உணர்ந்த ஸ்ரீலங்கா சோவனிஸ அரசானது, தற்போது இலங்கை தேசிய இனப்பிரச்சனையை புதிய வடிவில் சந்திக்கத் தொடங்கியுள்ளதையே இன்றைய நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

## இனவெறியர்களின் அராஜகம்

அதாவது, இன்று அப்பாவி இந்திய மீனவர்களை சுட்டுக் கொள்வதும் —— மீனவர்களை துன்புறுத்துவதும் —— அவர்களின் பொருட்களை அபகரித்து செல்லுவதும் —— மீனவர்களை கைதிகளாக்குவதும் —— இன்றைய அன்றாட நிகழ்ச்சிகளாக மாறிவிட்டன.

இந்திய கடல் எல்லைக்குள் மீன் பிடித்துக் கொண்டிருந்த 5 மீனவர்களை இதுவரை ஸ்ரீலங்கா அரசு படை கொன்றொழித்தது. 11.12.84ல் முனுசாமி என்பவரையும் — 07.01.85ல் மேலும் இருவரையும் — 13.02.85ல் ஆனந்தம், அந்தோனி ஆகிய இரு மீனவர்களையும் சுட்டுக் கொன்றது.

5.12.84ல் இந்திய கடல் எல்லைக்குள் மீன் பிடித்துக் கொண்டிருந்த விசைப்படகை சுட்டு அப்படகை நீரில் மூழ்கடித்ததோடு, அப்படகில் மீன் பிடிக்க சென்ற 4 இந்திய மீனவர்களையும் கைது செய்தனர். இந்நிகழ்ச்சியை இந்தியாவிலுள்ள, இலங்கை தூதரே ஒப்புக் கொண்டுள்ளார். 07.01.85ல் 20 இந்திய மீனவ படகுகளை தாக்கி அதிலிருந்த இறால், மீன்களையும், வலைகளையும் கொள்ளையடித்து சென்றனர். இவ்வாறே, 10.01.85ல் மீனவர்களை தாக்கிவிட்டு அவர்களின் பொருட்களை கொள்ளையடித்துச் சென்றபோது இந்திய கடற்படையினரால் துரத்திப் பிடிக்கப்பட்டனர். 25மீ நீளமும் — 5மீ அகலமும் கொண்ட ஸ்ரீலங்கா கடற்படை ரோந்துப் படகு 7 ஸ்ரீலங்கா கடற்படை வீரர்களுடனும் ஸ்டென் துப்பாக்கிகள், லகு இயந்திர துப்பாக்கிகள் இவற்றோடு இந்திய மீனவர்களிடம் கொள்ளையடித்த பொருட்களோடும் கைப்பற்றப்பட்டது. இக்கடற்படை வீரர்கள் 21.01.85ல் விடுதலை செய்யப்பட்டனர்.

20.01.85லும் படகுகளை தாக்கி கொள்ளையடித்துவிட்டு துப்பாக்கியால் சுட்டபோது அந்தோனியடிமை படுகாயமடைந்தார். மற்றும் 6 மீனவர்களுக்கும் காயம் ஏற்பட்டது. 03.02.85ல் ஜோசப், பவுத்துளி ஆகியோரின் படகுகளை இழுத்துச் சென்றனர். சிறிது தூரத்தில் பவுத்துளி என்பவரின் படகை விட்டுவிட்டு ஜோசப் என்பவரின் படகையும் அதில் மீன்பிடிக்க சென்ற 4 மீனவர்களையும் இழுத்துச் சென்றனர் இதே இடத்திற்கு திரும்பவும் வந்த ஸ்ரீலங்கா படையினர் ஜெபமாலை என்பவரின் படகை தாக்கினர். 15 கிலோ மீன்களை கொள்ளையடித்தனர். இத்தாக்குதல்களால், ராமகிருஷ்ணன்–ஜேம்ஸ்–இன்பிரித் ஆகியோர் படுகாயமடைந்தனர். பின்னர் ஜெபமாலையின் படகை தமது ரோந்துப்படகால் மோதியதால் விசைப்படகு முற்றாக சேதமடைந்தது. படகு நீரில் அமிழ்ந்தது. இதன் பின்னர் அலங்காரம் என்பவரது விசைப்படகிலும் இதர 20 விசைப்படகுகளிலும் சுமார் 450 கிலோ மீன்களை கொள்ளையடித்தனர். மீன் வலை, கயிறுகளை அறுத்து கடலில் வீசினர். இது போன்ற தாக்குதல்கள் 11, 13, 20 திகதிகளிலும் தொடர்ந்தன.

## இந்திய தொழிலாளர்கள் பாதிப்பு

ஸ்ரீலங்கா இனவெறி அரசின் தாக்குதல்களால் பல இராமேஸ்வரம் மீனவர்கள் தங்கள் குடியிருப்புக்களைவிட்டு வேறு இடங்களுக்கு செல்கின்றனர். இதுவரை 650 விசைப் படகுகள் இராமேஸ்வரம் பகுதியை விட்டு சென்றுள்ளன. இதனால் 10,000 மீனவ தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். இந்நிலையால் இராமேஸ்வரம் – தலைமன்னார் கப்பல் போக்குவரத்து ஒத்திப் போடப்பட்டுள்ளது. இதனால் சுற்றுலா பயணிகளையும்–கப்பல் பயணிகளையும் நம்பி வாழ்ந்து வந்த 5,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## ஏகாதிபத்தியமும் அதன் தந்திரமும்

தொடரும் இந்நிகழ்ச்சிகள், யாவும் உலக ஏகாதிபத்தியங்களினதும், அதன் செல்லப் பிள்ளைகளினதும் சூழ்ச்சித் திட்டங்களையே வெளிப்படுத்துகிறது. ஏனெனில், இந்திய கடல் எல்லையை மீறி இந்திய மீனவர்களை கொலை செய்வதன் மூலமும், மீனவர்களை துன்புறுத்தவதன் மூலமும் இந்தியாவை வலிய சண்டைக்கு இழுத்து இதன் மூலம் உலக ஏகாதிபத்தியங்களினதோ அல்லது அதன் அடிவருடிகளினதோ கூலிப்பட்டாளங்கள் அமைதிகாக்கும் படை என்ற ரீதியில் தமிழ் ஈழ மண்ணில் தமது பாத சுவடுகளை பதிக்கவே இந்த நடவடிக்கைகள். இந்த சூழ்ச்சித் திட்டங்களை வகுக்கவே கடந்த 11.2.1984ல் அமெரிக்க கொடுங்கோலன் ரீகனின் சிறப்புத்தூதர் ''வால்டஸ்'' இலங்கைக்கு விஜயம் செய்ததையும் எடுத்துக் காட்டுகின்றது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் என்ற அரக்கர் கூட்டம் தமது கொடுங்கரத்தை இந்து மகா சமுத்திர பிராந்திய நாடுகளை நோக்கியே நெரித்துக் கொண்டிருக்கிறது. ஏனெனில் அத்திலாந்திக் சமுத்திரத்திலும், பசுபிக் சமுத்திரத்திலும் உள்ள அக்கம் பக்க நாடுகள் வல்லரசு நாடுகளாததால் இவற்றை சுரண்டுவதற்கு லாயக்கற்று. இந்து மகா சமுத்திர நாடுகளே இவர்களின் சுரண்டலுக்கு லாயக்காகி விட்டது. இந்து மகா சமுத்திர பிராந்திய நாடுகளில் டாலர் 10,000மில். முதலிட்டுள்ள அதே வேளையில் தமது உற்பத்திப் பொருட்களில் 46 சதவீதமானவற்றை இந் நாடுகளிலேயே அமெரிக்க ஏகாதிபத்தியம் சந்தைப்படுத்துகிறது.

இந்து மகா சமுத்திர பிராந்திய நாடுகளில் தமக்கு ஏதும் நெருக்கடிகள் ஏற்படின், தனது இராணுவ பலத்தை கொண்டே பயமுறுத்தி சுரண்டுவதற்கு இந்து மகா சமுத்திரத்தின் மத்தியிலுள்ள டியாகோகாசியாவில் தனது இராணுவ தளத்தை பல நவீனகர வசதிகளுடன் விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இந்த சுரண்டல் நடவடிக்கை

(10ம் பக்கம் பார்க்க)



இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள தமிழீழ மக்கள்.

## தமிழீழ தேசபிதா

ளாதார சமூகத்தினரில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள முன் வருவர்'' என்று குறிப்பிட்டார்.

சிறி லங்கா முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கையினுல் சீரழிந்து கொண்டிருக்கும் இலங்கை மக்களின் குறிப்பாக சிங்கள தொழிலாளர்கள் தமது நிலையை உணர்ந்து தனது அரசுக்கெதிராக திரும்பி விடாதிருப்பதற்காக தூவி விடப்பட்ட இனவாத வித்துக்களால் தமிழ் சிங்கள இனங்களிடையே பகைமையை வேண்டுமென்றே உண்டாக்கியிருப்பதை தெளிவாகவே எடுத்துரைத்திருக்கிறார்.

அவர் தரகு முதலாளித்துவ அரச யந்திரத்தை உடைத்தெறிந்து மக்களின் முழுமையான விடுதலைக்காகவே தன்னை அர்பணித்து தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தை கட்டி வளர்த்து அதன் தலைமை பாத்திரத்தை நிர்வகித்ததுமல்லாமல் தமிழ் பேசும் மக்களிற்கும் ஆதரவாக அவர்களை சரியான தலைமையில் நடத்தி தமிழ் பேசும் மக்களின் மிகுந்த அபிமானம் பெற்று அவர்களின் ஒப்பற்ற தலைவராகவும் அவர்களின் பிதாவாகவும் வளர்ந்து மக்களின் மனங்களின் நிறைந்துள்ளார். தமிழ் ஈழத் தேச பிதா தங்கத் துரை

அவர் நீதி மன்றத்தையே தனது மேடையாக்கி தனது வரலாற்றுப் புகழ்மிக்க உரையினுல் தமிழ் மக்களின் பிரச்சனையை சர்வதேசப் பிரச்சனையாக்கி உலக மக்களின் கவனத்தை ஈர்த்த பெருமை தமிழ் ஈழச் தேச பிதா தங்கத் துரையையே சாரும் என்றுல் மிகையாகாது.

''யானை இருந்தாலும் ஆயிரம் பொன் யானை இறந்தாலும் ஆயிரம் பொன்'' என்பார்கள் அது போல, இனவெறியர்களின் நரபலி வேட்டைக்கு வெலிக்கடை சிறையில் தமிழ் பேசும் மக்களின் நேசம் கலந்த, பெறுமதியான, உயிரை நீத்து, உலகத் தமிழ் மக்களையும் அடக்கி ஒடுக்கப்படும் எல்லா மக்களையும் கொந்தளித்து எழ வைத்தார்.

இன்று தேசபிதாவின் அரும் முயற்சியால் கட்டி எழுப்பப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கம் சர்வதேச ரீதியாக உறவுகளில் வலுவடைந்து பலமான ஒரு ராணுவ அமைப்பைக் கொண்டு தமிழ் ஈழத்தில் போராடிக் கொண்டிருப்பதற்கு, அவரின் முன் முயற்சியே காரணமாகும்.

''நாம் எமது கடமையை முடிந்தவரை செய்த மன நிறைவுடன் எதிர் காலத்தை சிறையில் களிக்கவோ — வேண்டுமாயின் மரணத்தைக் கூட தழுவவோ நாம் தயங்கவில்லை.'' என எடுத்துரைத்து மரணத்தை துச்சமென மதித்து செயல்பட்டவர்.

அவரின் தீர்க்க சிந்தனையால் உறுதியுடன் வளர்க்கப்பட்ட ''தமிழ் ஈழ விடுதலை இயக்கம்'' அவரின் சிந்தனைகள் எண்ணங்கள் இன்றும் என்றும் அழியாமல் மேலும் மேலும் வளர்த்துக் கொண்டு சிறிலங்கா அரச யந்திரத்தை உடைத்தெறிந்து தமிழ் பேசும் மக்களின் விடுதலை மிக விரைவில் வென்றெடுத்து மக்களின் சுபிட்சமான வாழ்வுக்கு வழி வகுப்பது நிதர்சனமானது.

படிப்பகம்

www.padippakam.com



தொடர்ச்சி

### பிரிட்டன் ஆயுத உதவி மறுப்பு....

அடக்க முடியவில்லை. அடக்கவும் முடியாது. ஏனெனில், தமிழ் ஈழ மக்கள் ''மக்கள் போராட்ட''ப் பாதையில் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்க ஏகாதிபத்தியம் கூட அன்றிருந்து இன்று வரை தனது முழுப்பலத்தையும் மக்கள் போராட்டத்திற்கு எதிராக காட்டியும் — வியத்நாம்... நிக்கரகுவா... எல்சல்வடோர்... என புரட்சிப் பூக்கள் மலர்ந்த வண்ணமே இருக்கின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு இறுதித் தோல்வி தமிழ் ஈழத்திலேயே.

ஸ்ரீலங்கா நவ பாஸிஸ அரசுக்கு இன்றைய உடனடித் தேவையாக லேற்றஸிஸ் ரோந்துப் படகு — வேட்டைக் காரப் படகு (கடல் எல்லையை பாதுகாக்க) — எதிரிப் படகுகளின் நடவடிக்கையை கவனிக்க சிறிய விமானங்கள் — போராளிகளை ஒழிக்க நவீனகர ஆயுதங்கள் தேவைப்படுகிறது. இவற்றை வாங்குவதற்கு இலங்கையிடம் வக்கில்லை.

### பாக்கிஸ்தான் தந்திரம்

ஆனால் ஸ்ரீலங்காவுக்கு இது பெரிய பிரச்சனையாகவும் இருக்கப் போவதில்லை. ஏனெனில் பாக்கிஸ்தான் — இஸ்ரேல் போன்ற நாடுகள் தமது மூல நாடுகளுனூடாக பணப்பிரச்சனையை தீர்த்து வைக்க சந்தோஷமாக செயல்படும். ஏனெனில் பாகிஸ்தானின் ஒரே குறிக்கோள் இந்தியாவையும் இலங்கையையும் மூட்டி வைப்பதே. இதற்காக பாகிஸ்தான் நிச்சயம் தாராள மனத்தோடு செயல்படும்.

கடந்த 10.02.1985ல் கூட ஜைரே ஏர்வேஸ் சரக்கு விமானத்தில் ஆயுதங்கள் கொழும்பு வந்து சேர்ந்தன. ஜைரே நாட்டிற்கு சொந்தமான இந்த சரக்கு விமானம் போர்த்துக்கீஸ் நாட்டில் இருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்டு, ஜோர்டானில் இறக்கப்பட்டு கொழும்பு சென்றது. இவ்விமானத்தில் 15,000 கிலோ எடையுள்ள ஆயுதங்களும், வெடிமருந்துகளும் சென்றன. 419 பெட்டிகளில் நவீனகர ஆயுதங்கள் இவ்விமானத்தில் இருந்தன. இவ் ஆயுதங்கள் போர்த்துக்கீஸ் நாட்டில் இருந்தே ஏற்றப்பட்டன. இதை மறைப்பதற்காகவே ஜோர்டானில் விமானம் இறக்கி ஏற்றப்பட்டது.

### உளவு மாளிகைத் திட்டம்

இவற்றோடு, அமெரிக்க ஏகாதிபத்தியமானது ஏகாதிபத்திய எடுபிடி நாடுகளில் வானொலி நிலையம் என்ற பெயரில் மிகவும் சக்தி வாய்ந்த உளவு மாளிகையையே அமைத்து வருகிறது. இஸ்ரேல் சியோனிஸ அரசானது தான் ஆக்கிரமித்த அரபுப் பகுதிகளில் அமெரிக்க ஏகாதிபத்தியம் வானொலி நிலையம் அமைக்க அனுமதி வழங்கியுள்ளது. துருக்கி-ஸ்பெயின்-கிரீஸ் - நாடுகளிலும் வானொலி நிலையம் அமைக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் அனுமதி கேட்டுள்ளது. இப்படியாக செயல்படும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தமிழ் ஈழ மண்ணான திருகோணமலையிலும் வானொலி நிலையம் அமைப்பதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. திருகோணமலையில் அமெரிக்கா அமைக்க இருக்கும் "வோய்ஸ் ஒவ் அமெரிக்கா" வானொலி நிலையமானது உண்மையில் சக்தி வாய்ந்த உளவு மாளிகையே என கொழும்பில் வெளியாகும் 'போரம்' பத்திரிகையே கூறுகிறது.

இந்த வானொலி நிலையத்தில் 500 கிலோ-வாட் உட்பட அதி சக்திவாய்ந்த பல சக்தி வாய்ந்த டிரான்ஸ் மீட்டர்கள் தரைமட்டத்திற்கு மேல் அமைக்கப்படுமாம். தரைக்கு கீழே எண்ணற்ற கிலோ மீட்டர் தூரத்திற்கு வயர்களிலான "அன்டனா'' இணைப்புகள் பதிக்கப்படுகின்றன. இதற்கு மேலாக எந்த ஒலியையும் துல்லியமாக கிரகித்துக் கொள்ளும் ''மைக்ரோபோன்'' கருவிகளும் வைக்கப்படுகின்றன. இவையாவும் வானொலி நிலையத்திற்காக அல்ல. உளவு அறிவதற்காகவே. இவ் சக்தி வாய்ந்த அன்டனாக்கள் கிரகித்த விஷயத்தை செயற்கை கோள் மூலம் வாசிங்டனில் உள்ள அமெரிக்க இராணுவ தலைமையகத்திற்கு உடனுக்குடன் அனுப்பி வைக்கக் கூடியவை.

கடற்கரைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள டிரான்ஸ் மீட்டர்கள் பூமிக்கு அடியில் உள்ள "அன்டனா" வயர்களுடன் இணைக்கப்பட்டு இருக்கும். ஆண்டனாவில் இருந்து கிடைக்கும் தகவல்களை, இவை கடல் மார்க்கமாக நீரின் அடியில் காத்துக்கிடக்கும் நீர்மூழ்கிக் கப்பலுக்கு தெரிவிக்கக் கூடியவை.

இப்படியாக, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கொலை வெறிக்காரர்கள் இந்துமகா சமுத்திர பிராந்திய நாட்டு மக்களை நெரித்துக் கொண்டிருக்கிறது. இவற்றிற்கு எதிரானமக்கள்போராட்டங்கள் வெடித்த வண்ணமே இருக்கின்றன. அன்று அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு மரண அடிகொடுத்தவியத்நாம். நிக்கரவோ....போல அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு அடுத்த மரண அடி தமிழ் ஈழத்திலேயே.

## அவசர நிலை நீடிப்பு....

இலங்கையில் ஏற்கனவே அமுலில் உள்ள அவசரகாலை' நிலை பிரகடனம் மேலும் ஒரு மாதம் நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கான மசோதா 22.02.85ல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இம் மசோதா வாக்கெடுப்பின் போது ஒரேயொரு கம்யூனிஸ்கட்சி உறுப்பினர் சரத்முத்துக்கடவே எதிர்த்து வாக்களித்தார்.

# தமிழ் மாணவர் அமைப்பின் மாபெரும் ஊர்வலம். சிறிலங்கா இனவெறி அரசைக் கண்டித்து..

சர்வதேச ரீதியாக ஒடுக்கப்படும் மக்கள் விடுதலைப் போராட்டங்களில் மாணவர்களின் சக்தியானது மிகப் பெரிய பங்களிப்பாகும். முதலாளித்துவ அரசின் சமூக அமைப்பினுலும் அரசியல் சூழ்நிலைமைகளினுலும் பிரச்சனைகளை எதிர்நோக்குபவர்களுள் மாணவர்களும் ஆவர். இன் நிலமையே இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது மாறிக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகளின் எண்ணங்களுக்கு ஏற்ப கல்வி முறையும் மாறிக் கொண்டிருப்பதால் கஷ்ட நிலைக்கு தள்ளப்படுவபர்கள் யார் எனில் மாணவர்களே.

அரசின் இனவாத கருத்துக்களினுல் இலங்கையில் தமிழ் மாணவர்களின் நிலையானது கவலைக் கிடமாய் உள்ளது. பல்கலைக் கழகம் சென்று படிக்க முடியாத நிலை. தேர்ச்சி பெற்று இருந்தும் பல்கலைக் கழகம் மறுக்கப்பட்ட நிலையிலும் படித்தும் வேலை கிடைக்காத நிலையிலும் பின் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது தமிழ் மாணவர் சமுதாயம்.

இன்று கூர்மை அடைந்து வரும் தமிழ் ஈழப் போராட்டத்தில் ஒடுக்கப்படும் மாணவர் சமுதாயத்தின் எழுச்சி மிகவும் அவசியமாகும். இந்த கருத்தில் கொண்டு மாணவர் சமுதாயத்தை ஒன்றிணைத்து தமிழ் ஈழப் போராட்டத்தை வலுப்படுத்த தமிழ் மாணவர் அமைப்பு என்ற பெயரில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் மாணவர் அமைப்பு (ஓ.டி.எஸ்) ஒன்றை தொடங்கியுள்ளது. இவ் அமைப்பு தமிழ் மாணவர்களை ஒன்று திரட்டி நெருக்கடிக்குள் சிக்கியுள்ள தமிழ் பேசும் மக்களின் விடுதலை போராட்டத்துடன் கரம் இணைந்துள்ளது.

தமிழ் மாணவர் அமைப்பு (ஓ.டி.எஸ்) தனது ஆரம்ப நடவடிக்கையாக தமிழக மீனவர்களின் அவல நிலையையும் தமிழ் ஈழ மக்களின் நெருக்கடி நிலையையும் வெளிப்படுத்தும் முகமாகவும் தமிழ் ஈழ போராட்டத்துக்கு ஆதரவு தேடும் முகமாகவும் — சென்னையில் மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தியது. தேனாம் பேட்டையிலிருந்து ஆரம்பித்து சிறிலங்கா தூதரகத்திற்கு முன்னால் முடிந்த ஊர்வலத்தில் 6000த்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். அவ் ஊர்வலத்தில் மாணவர்கள் தமிழக மீனவர்களின் நிலையையும் தமிழ் ஈழ மக்களின் நிலமையை எடுத்துரைக்கும் சுலோக அட்டைகளை தாங்கி சென்றனர்.



தமிழ் மாணவர்களின் ஊர்வலம்

## சிங்கள மாணவ தோழர்களே! கல்வீச்சை நிறுத்தி குண்டு வீச்சுக்கு தயாராகுங்கள்!

ஸ்ரீலங்காவின் தலைநகரான கொழும்பில் இரண்டாவது முறையாகமாணவர் கிளாச்சி நடந்தது. சர்ச்சைக்குரிய பல்கலைக்கழக கழக மசோதாவை எதிர்த்து சுமார் 600 மாணர்கள் ஊர்வலத்தில கலந்து கொண்டனர். இவர்களின் கல்வீச்சில் பல கடைகள், கட்டிடங்கள் சேதமடைந்தன. இலங்கை அரசுக்கு எதிரான கோஷங்களை கொண்ட அட்டைகளை ஏத்தி வன்முறைகளில ஈடுபட்டனர், இதை தொடர்ந்து 10 துறவிகளையும் மற்றும் பல மாணவர்களும் கைது செய்யப்பட்டனர்-செய்தி.

சிங்கள மாணவ தோழர்களே! இவ்விடத்தில் உங்களுக்கு தமிழ் ஈழ தேச பிதா தங்கத்துரையின் நீதிமன்ற உரையை ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

''நாம் விடுதலை பெறுவது நிதர்சனமான உண்மை. இதன் பின்னர் உங்கள் நாட்டின் சட்டப் புத்தகங்களின் நிரந்தர இடமபெற்று விட்ட எச்சட்டங்களும் எம்மை அணுகாது. அப்படியாயின், இச்சட்டங்களையும் பயங்கர வாதத்தையும் எதிர்காலத்தில் நீங்களே சுவீகாரம் எடுப்பீர்கள் என்ற கையாறு நிலையை இப்போதே எய்தி விட்டீர்கள். (1983-02-24ல் சிறிலங்கா, கொழும்பு நீதிமன்றத்தில்....)

எதிர்காலத்தில் இது நிகழப்போவது உண்மை. அதற்கு ஓர் முன்னறிவிப்பே தற்போது தங்கள் மீது இத் தரகு-முதலாத்துவ அரசு மேற்கொண்டு வரும் அடக்கு முறைகள், ஆம் தரகு-முதலாளித்துவ அரசு தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் எதிரானது தான. ஏன் மனித குலத்திற்கே எதிரானதுதான். இன்று இதை நீங்கள் புரிந்து கொள்ளாது இருக்கலாம், இவர்களின் இனவாதப் புயலில் நீங்கள் சிக்கியிருக்கலாம். ஆனால் வரலாற்றில் இதை உணரத்தான் போகிறீர்கள். இன்று உங்களை கைது செய்ததோடு இது நிறகலாம். ஆனால், உங்கள், போராட்டம் உக்கிரமடையும் வேளை துப்பாக்கி சூடு நடத்துவதற்கும் தயங்கப போவதில்லை,

இவ்மசோதா ஏழை மாணவர்களை மேல் படிப்புக்கு செல்ல முடியாததாக்கப் போகின்றது, பணக்கார மாணவர்களுக்கு சலுகை வழங்கப் போகிறது என்று முதலைக் கண்ணீர் வடிக்கிறார் ஸ்ரீமாவோ. 1971-ம் ஆண்டை நினைத்து பாருங்கள்! எத்தனை இளைஞர்கள் களனி கங்கையில் மிதந்தார்கள் என்பதை அறிவீர்கள்,

நாங்களும் ஒரு காலத்தில் உங்களைபபோல ஊர்வலங்களும்-கோஷங்களும் போட்டால்தான். இவை எல்லாம் உங்களுக்கு விடுதலை வாங்கித்தரப் போவதில்லை. மக்கள் ஆயுதப் போராட்டத்திற்கு தயாராகுங்கள், ஏகாதிபத்திய, முதலாளித்துவத்திற்கு எதிராக தமிழ் ஈழத்தில் கேட்கும் துப்பாக்கி வேட்டுக்கள் சிறிலங்காவிலும் கேட்கட்டும். உங்கள் நியாயமான போராட்டத்திற்கு தமிழ் ஈழ மக்களின் பூரண ஆதரவு என்றும் உண்டு.

படிப்பகம்

www.padippakam.com



# இந்து சமுத்திர பிராந்தியத்தில் அச்சுறுத்தல். பாகிஸ்தானுக்கு ராணுவ உதவி

இந்து மகா சமுத்திர பிராந்திய நாடுகளை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரும் நோக்குடனும், இந்தியாவுக்கு எதிராக எதிர்ப்புரட்சி அரசுகளையும் பாகிஸ்தானை மாற்றி வரும் அமெரிக்க ஏகாதிபத்தியம், இவ்வருடம் 320 கோடி டாலர் இராணுவ உதவியை பாகிஸ்தானுக்கு அளித்துள்ளது. இவற்றோடு அதி நவீனகர ''கேப்ரா'' மாடல் போர் விமானங்கள் 25 ஐயும் பாகிஸ்தானுக்கு வழங்கியுள்ளது. இவ்வருட இறுதிக்குள் மேலும் இந்த ரக 14 விமானங்களும் பாகிஸ்தானுக்கு வழங்கப்படுமாம். மிக நவீனகர ஆயுதங்களை தாங்கக்கூடிய மேற்கத்தைய நாடுகளின் அதி நவீனத்தன்மை கொண்டதாகும் இவ்விமானங்கள். இவ் விமானங்களில் 20 மி.மி அளவுள்ள மிகச் சிறிய நுட்பமான பீரங்கியும் பொருத்தப்பட்டுள்ளதாம். இவற்றோடு சின்னஞ்சிறு ஏவுகணை ஏவூர்திகளும் ''டோவ்'' என்ற ஏவுகணைகளும் இந்த ''கேப்ரா'' மாடல் போர் விமானங்களில் பொருத்தப்பட்டுள்ளது. இவ் ஏவுகணைகள் டாங்கிகளை கூட தகர்த்தெறியுமாம்.

அமெரிக்காவின் கைப்பொம்மையாளன் ஜியா—வுல்—கக்கின்' பொருளாதாரக் கொள்கையினால் பாகிஸ்தான் பூராவும் விண்ணை வெல்லுமளவிற்கு விலைவாசிகள் உயர்ந்துள்ளன. இவற்றை எதிர்கொள்ள சக்தியற்ற பாகிஸ்தான் மக்கள் நாடு பூராவும் ஜியா—வுல்—கக்கிற்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். இவற்றின் மத்தியிலும் பாகிஸ்தான், தன்னுடைய பட்ஜெட்டில் 73.4 சதவீத நிதியை ராணுவத்திற்கே செலவிடுகிறது. மீதமுள்ள 26 சதவீதமும் கூட போலீஸ், உணவுத்துறை போன்ற பாதுகாப்பு துறைகளுக்கே செலவிடப்படுகிறது.

பாகிஸ்தானுக்கு அளிக்கப்பட்ட அமெரிக்க இராணுவ உதவியானது இந்தியாவின் பாதுகாப்பிற்கு மேலும் இவற்றோடு சிறுவையும் இந்தியாவுக்கு எதிரான எதிர்ப்புரட்சி அரசுகை மாற்ற அமெரிக்க ஏகாதிபத்தியம் முயன்று கொண்டிருக்கிறது. 1983ல் அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சர் கால்பார்வெயின் பர்கர் சீன விஜயமும் — 1984ல் சீன பாதுகாப்பு மந்திரி ஜாங் ஜப்பிங்சின் அமெரிக்க விஜயமும் இதனை ஊர்ஜிதம் செய்கின்றன. இந்த நிலையில் இந்து மகா சமுத்திரத்தின் முக்கிய கேந்திர ஸ்தாபனமாகிய திருகோணமலையில் அமெரிக்கா தளம் அமைக்க முற்படுவது இந்தியாவின் பாதுகாப்பிற்கு மேலும் அச்சுறுத்தலாகும். இவற்றை கருத்திற் கொண்டே தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தலைவர் தோழர் சிறீ சபாரெத்தினம் இந்திய பாதுகாப்பு தமிழ் ஈழ விடுதலையுடன் பின்னிப் பிணைந்துள்ளது என்று கூறினர்.

## அதுலத்முதலியின் கையாலாகத்தனம்

சென்ற நவம்பர் திங்களிலிருந்து தொடர்ச்சியாகவே சுமார் இரண்டு மாதங்களுக்கும் மேலாக எமது இயக்கத் தலைவர் ஸ்ரீசபாரத்தினம் அவர்கள் நாட்டில் நின்றபோது அவரைத் தனது படைகளை அனுப்பிக் கைது செய்யும் முயற்சிகளில் ஸ்ரீலங்கா இராணுவ அமைச்சர் அத்துலத் முதலி படுதோல்வி கண்டிருந்தார்.

கைது செய்யாமலேயே தங்கள் அரசினால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு வைத்திருக்கும் எமது தலைவரைக் கைது செய்தோ கொன்றொழித்தோ விடலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த அத்துலத் முதலி தனது கையாலாகாத் தனத்தை தமது ஒலிபரப்புக் கூட்டுத் தாபனச் செய்தியறிக்கை மூலம் பகிரங்கமாகவே பறைசாற்றினர்.

கண்காணிப்பு வலயம், கடல், தரை, வான் மார்க்கமாகச் சுடப்படும் அது, இது என்று ஸ்ரீலங்கா பாராளுமன்றத்திலும், பேட்டிகளிலும் கதைவிட்டுக் கொண்டிருக்கும் அமைச்சர் அத்துலத் முதலி, ஸ்ரீசபாரத்தினம் தற்சமயம் நாட்டில் நிற்கிறார் என்ற விபரத்தை 24/12/84 மாலை 6 மணிச் செய்தியிலும், இரவு 9 மணிச் செய்தியிலும் திரும்பத் திரும்ப அறிவித்துக் கொண்டார்.

இவ்வளவு தூரம் வல்லாண்மை பேசும் இந்தச் ஸ்ரீலங்கா அரசின் தேசிய பந்தோபஸ்து அமைச்சருக்கு இந்தக் கையாலாகாத் தனத்தை வெளிப்படையாகச் சொல்ல வெட்கமாக இல்லையா? என்று தமிழுழ மக்கள் எள்ளி நகையாடினர்கள்.

## சிறிலங்கா ராணுவம்

களுக்கு இந்தியா மிகப் பெரும் தடைக்கல்லாக இருப்பதால், இந்தியாவுக்கு இன்று பல வழிகளிலும் நெரிசலை ஏற்படுத்தி பணிய வைப்பதற்காக முயற்சி மேல் முயற்சி எடுத்து வருகிறது. அமெரிக்க ஏகாதிபத்தியம் தமது சொல்லைக் கேட்கக் கூடியவர்களாக, செல்லப்பிள்ளைகளாக பாகிஸ்தான், பங்களாதேஷ், சீனா, இலங்கை போன்ற நாடுகளை மாற்றி விட்டது. இதன் வழியில் செயல்படும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது படைகளை இந்து மகா சமுத்திரத்தின் முக்கிய கேந்திர ஸ்தானமாக விளங்கும் திருகோணமலையில் நிலை நிறுத்தவே இந்திய மீனவர்களை சுட்டுக் கொல்லும்படியாகவும், துன்புறுத்தும்படியும் தூண்டிவிடும் தனது நயவஞ்சக திட்டங்களை செயல்படுத்துகிறது.

லெபனானுக்குள் இஸ்ரேலிய படைகள் மிருகத்தனமாக நுழைந்து ஆக்கிரமிப்பு செய்து பாலஸ்தீன மக்களை கோரமாக இனப்படுகொலை செய்தது. பாலஸ்தீன விடுதலை வீரர்கள் லெபனானிலிருந்து வெளியேறிய பின்னரும் இஸ்ரேலிய படைகள் லெபனானிலிருந்து வெளியேறவேயில்லை. அது மட்டுமின்றி லெபனானின் ஆளும் கட்சியையும், அதன் கிறிஸ்துவ ராணுவ குண்டர்களையும் கைக்குள் போட்டுக் கொண்டு முஸ்லீம் மக்களுடன் மோதச் செய்தது.

இந்தப் பிரச்சனை ஐக்கிய நாடுகள் சபையில் விவாதிக்கப்பட்ட லெபனானில் அமைதி ஏற்படுத்தவே அமைதிகாக்கும் படைகளாக அமெரிக்க கப்பல் படையும் - பிரான்சின் விமானபடையும் அனுப்பப்பட்டன. ஆனால் அமெரிக்க, பிரித்தானிய ஏகாதிபத்தியங்கள் அமைதிப் படைகளாக செயல்படவில்லை. மாறாக ஆக்கிரமிப்பு படைகளாகவே செயல்பட்டன. குறிப்பாக இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி லெபனானில் தனது இராணுவ தளத்தை அமைத்தும் கொள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம் முனைப்புக் காட்டியது.

இதன் பாணியிலேயே செயல்படும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தமிழ் ஈழத்தில் மண் கவ்வப்போவது வரலாற்று ரீதியாக காணப்போகும் உண்மையாகும். அமெரிக்க ஏகாதித்தியம், ஸ்ரீலங்கா தரகு முதலாளித்துவ அரசுக்கு ஆலோசனைகள் வழங்கினால் என்ன; பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்துக் கொண்டு பாலஸ்தீன மக்களை நாடற்றவர்களாக்கிய—சிரியா நாட்டின் கோலான் குன்றுகளை கைப்பற்றிய - ஜோர்டானின் மேற்குகரையை அபகரித்த - லெபனானின் தெற்குப் பகுதியை கவ்விக் கொண்ட - எகிப்துக்குச் சொந்தமான சினாய் பாலைவனத்தில் மேய்ந்த இஸ்ரேலிய காட்டெருமையின் அரச படைகள் UNP அரச படைகளுடன் சேர்ந்தால் என்ன தமிழ் ஈழ மக்கள் இவர்களுக்கு சரியான பாடம் கற்பிக்கப் போகிறார்கள். ஏனெனில் தமிழ் ஈழ மக்கள் எதிர்பார்த்த நடவடிக்கைகளே இன்று நடைபெறுகின்றன. அதாவது ஒன்று சேரவேண்டிய மிக, மிக பிற்போக்குவாதக் கும்பல்கள் யாவும் ஒருங்கிணைந்துள்ளன.

எனவே, இந்திய மீனவர்களுடைய பாதுகாப்பு என்பது தமிழ் ஈழ விடுதலை மூலமே சாத்தியமாகும். உலக மக்களே! உலக ஏகாதிபத்தியங்களினதும் அதன் அடிவருடிகளினதும் கொலை வெறிக் கரங்களில் அகப்பட்டிருக்கும் தமிழ் ஈழ மண்ணை மீட்கப் போராடும் எமது கரங்களை வலுப்படுத்துங்கள்.

## நிதியின் தாக்கம் புரட்சிப் பாதையில்

தமிழ் ஈழ போராட்டத்தை நசுக்குவதற்கென — சர்வ தேச பயங்கரவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து தமிழ் பேசும் மக்களை அழித்தொழிப்பதென கங்கணம் கட்டிக் கொண்டு தீவிரமாக செயல் பட்டு வருகின்றது சிறிலங்கா பேரினவாத அரசு.

இவ் அரசு இன வெறி நடவடிக்கையினால் தமிழ் ஈழப் போராட்டத்தை நசுக்கி விடலாம் என கனவு கண்டு கொண்டிருக்கிறது. ஆனால் சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தமும் தமிழ் ஈழ போராட்டத்திற்கு மேலும், மேலும் வலுவூட்டிக் கொண்டிருப்பதுடன் உரமாகவும் அமைகின்றது.

நெருக்கடி கால கட்டத்தை தீர்க்கமாக உணர்ந்து புறநிலை காரணிகளை ஆராய்ந்து தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தை, மக்கள் போராட்டமாக மாற்றி, ஒழுங்கமைத்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் ஈழ விடுதலை இயக்கமானது தனது இறுதி போராட்டத்தின் ஒரு பகுதியாக அரசு பயங்கரவாதிகளுக்கு எதிராக நடத்திய மிகப் பெரிய தாக்குதல் ஆன சாவகச்சேரி போலீஸ் நிலைய தாக்குதலும், கைதடியில் இராணுவத்தினரை வழி மறித்து நடத்திய தாக்குதலும், பழைய முறி கண்டியில் நடத்தப்பட்ட ரயில் தகர்ப்பும் இன வெறி அரசை அச்சம் கொள்ள செய்துள்ளதுடன் முன் எப்போதும் இல்லாதவாறு நிகழ்த்தப்பட்ட இத்தாக்குதல்களினால் தமிழ் ஈழ போராட்டத்தை கூர்மையடைய வைத்துள்ளதுடன், அரசு பயங்கரவாதிகளுக்கு பெரும் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. நடத்தப்பட்ட ஒவ்வொரு தாக்குதலிலும் மக்களின் பாதுகாப்பை முழு நோக்காக்கிக் கொண்டு தமிழ் ஈழ விடுதலை இயக்க ராணுவத்தினர் செயல் பட்டதால் இது கால வரையில் நடத்தப்பட்ட சிறு தாக்குதல்களில் மக்கள் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அற்ற நிலைமை இருந்ததால், ஒரு தாக்குதல் நடந்த பின் அவ் இடத்தில் உள்ளவர்கள் அரச ராணுவத்தினரால் கொடூரமான நிலைமைக்கு உள்ளாக்கப் படுவார்கள் என்றிருந்த எண்ணம், மலையேறி விட்டது.

விடுதலை போராட்டத்தை புற நிலை காரணிகளை தீர்க்கமாக் ஆய்வு செய்து முன்னெடுத்திருக்கும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம், மேலும் மேலும் தனது சக்தியை பெருக்கிக் கொண்டு இறுதி போராட்டத்தை எடுக்க பாரிய அளவில் நிதி யுதவி வேண்டியுள்ளது.

ஆகவே, ஒடுக்கப்படும் மக்களின் விடுதலையை வென்றெடுக்க — தமிழ் ஈழத்தை வென்றெடுக்க அனைத்து மக்களிடமும் தனது உதவி கரத்தை நீட்டியுள்ளது. தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காகப் போராடும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்துக்கு நிதியுதவி வழங்குவீர்.

**பணம் அனுப்பவேண்டிய முகவரி:**
K. ANANDAN, A/C 11506
INDIAN OVERSEAS BANK,
BRANCH — VIRUGAMBAKKAM,
MADRAS — 600092.
(S-INDIA).

## வெளிவந்துவிட்டது




ரெலோவின்
-1985 காலண்டர்-

வெளிவருகின்றது

### தீச்சுடர்

அனைத்து மாணவர்களையும் ஒன்று திரட்டி உலகை விழுங்கத் துடித்துக் கொண்டிருக்கும் ஏகாதிபத்தியத்தின் வலுவை முறியடிக்கும் நோக்கிலும், தமிழீழ விடுதலையை முறியடிக்கும் பிற்போக்கு சக்திகளையும் மாணவர்களுக்கும், மக்களுக்கும் இனங்காட்டுவதை நோக்காகக் கொண்டு, தமிழ் மாணவர் அமைப்பு தனது மாதச் சஞ்சிகையாக ''தீச்சுடர்'' வெளியிடுகின்றது.

மேற்படி இச்சஞ்சிகைக்கு மாணவர்களிடமிருந்து முற்போக்கான ஆக்கங்கள் கவிதைகள் எதிர்பார்க்கப் படுகின்றது.

— தமிழ் மாணவர் அமைப்பு (ஓ.டி.எஸ்)

படிப்பகம்

Kanosh Kanesh – Ponnampalam

www.padippakam.com

# கல்முனை பள்ளிவாசல் தர்மகர்த்தா சுட்டுக்கொலை

பட்டு நகரில் உள்ள கல்முனை பள்ளி வாசலில் தர்மகர்த்தாவும் இஸ்லாமிய மத தலைவருமான மீரா முகைதீன் பொலியாரினால் கல்முனை சந்தியில் சுட்டு கொலை செய்யப்பட்டார். இவ் இன வெறி அரசு தமிழ் பேசுபவர்க் என்ற காரணத்திற்காக இக் கொலைகளை மேற் கொண்டு வருவது தமிழ் பேசும் மக்களையே பூண்டோடு அழிப்பதை இக் கொலை மூலம் அம்பலப் படுத்தியுள்ளது.

# 8 அப்பாவி தமிழ் முதியவர்கள் பலி

சிறி லங்கா அரசு கூலிப்படையினரின் வெறியாட்டத்திற்கு தமிழ் இளைஞர்கள் மட்டுமல்ல அப்பாவி பொது மக்கள் கூட அதாவது 50 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களும் பலியாகிக் கொண்டிருக்கின்றனர். முல்லிக் குளத்தை சேர்ந்த 8 அப்பாவி தமிழ் மீனவர்களை அரச ராணுவத்தினர் அவர்கள் இருந்த மீன் வாடியிலிருந்து கடற்கரைக்கு இழுத்துச் சென்று சித்திரவதைக்கு உட்படுத்தி சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

# அமெரிக்கா இஸ்ரேலுக்கு இலவச ஆயுத உதவி

சுமார் 400 கோடி டாலருக்கும் அதிகமான ராணுவ தளபாடங்களை இஸ்ரேலுக்கு அமெரிக்கா இலவசமாக தரப்போகிறது. இது சம்பந்தமாக இஸ்ரேலுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே சமீபத்தில் டெல்அவிவ்வில் நடந்த முதல் சுற்றுப் பேச்சில் காணப்பட்ட போக்கின்படி சுமார் 400 கோடி டாலர் அளவுக்கு அமெரிக்க உதவி இருக்குமென்று சொல்லப்படுகின்றது. இப்போதைய நிதியாண்டில் அமெரிக்க உதவி 260 கோடி. டாலர் அளவுக்கு இருந்தது. இதைப்போல ஒன்றரை மடங்கு உதவி தேவையென்று இஸ்ரேல் தரப்பில் வற்புறுத்தப்பட்டது. தன்னை சுற்றியுள்ள அரசு நாடுகளைவிட இஸ்ரேல் தனது இராணுவ வல்லமையை நிலைநாட்ட விரும்புகிறது.

அதற்காக பழைய ஆயுத சாதனங்களுக்குப் பதில் மிக நவீனமான போர் விமானங்கள்–டாங்கிகள்–ஏவுகணைகள் போன்றவற்றை வைத்துக் கொள்ள இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது.

மத்திய கிழக்கில் தனக்கு மிகவும் நெருக்கமான நேச நாடான இஸ்ரேலுக்கு கூடியவரை அதிகமாக உதவ அமெரிக்காவும் தயாராக இருக்கிறது. இதுவரை இஸ்ரேலுக்குத் தரப்பட்ட உதவிகளில் பாதி கடனாகவும் பாதி இலவசமாகவும் தரப்பட்டு வந்தது. இப்போது முழுக்க இலவசமாக வழங்கப்படுமாம். இவ் ஆயுதங்களை இஸ்ரேலானது இலங்கையிலும் பாவிக்கலாம்.

# இராமேஸ்வர மீனவர்களின் போராட்ட அறிவிப்பு

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையே உள்ள கடலில் எங்கு வேண்டுமானாலும் மீன் பிடித்துக் கொள்ளலாம். இந்திய மீனவர்கள் கச்சதீவை பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது தான் 1974ம் ஆண்டு ஒப்பந்தம். 1976ம் ஆண்டு ஒப்பந்தப்படி இலங்கைக் கடற்பகுதிக்குள் மீன் பிடிக்கக்கூடாது. இந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட வேண்டும் 1974ம் ஆண்டு ஒப்பந்தம் மீண்டும் அமுலுக்கு வர வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன் வைத்து கச்ச தீவுக்கு இராமேஸ்வர மீனவர்கள் சென்று சத்தியாக்கிரக போராட்டம் நடத்தப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



கொக்கிளாய் நாயாறு சம்பவத்தின், பின் விளைவினால். ராணுவத்தினரால் எரிக்கப்பட்ட தமிழ்பேசும் மக்களின் வீடு

# இஸ்ரேலிய துருப்புகளின் தாக்குதல்

21.02.1985ல் இஸ்ரேலிய துருப்புகள் திடீரென தெற்கு லெபனான் கிராமங்கள் மீது திடீரென தாக்குதல்களை மேற் கொண்டன. இதில் 4 கிராமங்கள் முற்றாக சேதமடைந்தன. பலர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். அமைதியான கிராமங்களை வெடி வைத்து தகர்த்தனர்.

# ஜெயவர்தனவின் வெறிப்பேச்சு

இலங்கையில் இப்பொழுது ராணுவத்திற்கும்–தமிழ் கொரிலாக்களுக்கும் நடக்கும் போரில் நாங்கள் தோற்றால் இலங்கை மண்ணில் சிங்களவர் மட்டுமல்ல முஸ்லீம்களும், தமிழர்களும் கூண்டோடு அழிவார்கள் என்று ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா கூறினார்.



[redacted] கொக்கிளாய், நாயாறு தாக்குதலி[redacted] கிராணுவ வன்முறைக்கு இலக்கான

# செய்திகள்

## மந்திரி சிறில் மத்தியு "டிஸ்மிஸ்"

தமிழ் பேசும் மக்கள் பிரச்சினைக்கு தீர்வாக ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன முன் வைத்த யோசனையை (சிறிலங்காவில்) தொழில் துறை அமைச்சர் சிறில் மத்தியு பகிரங்கமாகக் குறை கூறினார். மந்திரி சபையின் விதிகளையும், மரபு முறைகளையும் சிறில் மத்தியு மீறியுள்ளார் என்று குறை கூறி அவரை பதவி நீக்கம் செய்து விட்டார் அதிபர் திரு. ஜயவர்த்தன. தமது அமைச்சரவையின் இறுக்கமான தன்மையை வெளியுலகிற்கு எடுத்துக் காட்டவே ஜயவர்த்தன இவ்வாறு நடந்து கொண்டார் என்று எதிர் வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

இந்திய அரசியல் விவகாரக் குழுத் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதியின் தூண்டுதலின் பேரிலேயேதான் தன்னை பதவி நீக்கம் செய்தாரென சிறில் மத்தியு குறை கூறினர்.

## முழு இலங்கையிலும் ராணுவ ஆட்சிகொண்டு வர திட்டம்! பீற்றர் கெனமன் அறிவிப்பு

இனப் பிரச்சனைக்கு நியாயமான உண்மையான தீர்வை காண இந்த அரசாங்கம் விரும்பி இருந்தால், அதனை எப்போதே செய்திருக்கலாம். ஆனால், இப் பிரச்சனையை முற்றாகத் தீர்த்து வைக்க அரசாங்கம் விரும்பவில்லை என பீற்றர் கெனமன் கொழும்பு புதிய மண்டபத்தில் கொழும்பு மத்திய தொகுதி கட்சி அமைப்பாளர்களிடையே பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசும் போது, வடக்கில் தீவிரவாதம் அதிவேகமாகிவிட்டது. அதனை ராணுவ நடவடிக்கையால் தீர்த்து வைக்க முடியாது. அரசியல் தீர்வை காண்பதற்கு பதில் அரசாங்கம் படைப்பலத்தை பயன் படுத்துகிறது.

வட பகுதி தீவிர வாதிகளுக்கு தென் பகுதி தீவிரவாதிகள் உதவி அளிப்பதாக ஆட்சியாளர்கள் கூறுகின்றார்கள். ஆனால், தென் இலங்கை தீவிரவாதிகள் யார் என கூறவில்லை.

இப்படியாக திட்டமிட்ட பிரசாரத்தின் மூலம் பிற இடங்களிலும் இராணுவ ஆட்சி கொண்டு வரப்படலாம். இவ் விஷயத்தில் மக்களும் முற்போக்கு சக்திகளும் மிக விழிப்பாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

—பிரதமர் பிரேமதாஸா ஸ்ரீலங்கா வானொலி 19.02.1985 பி.எம்–6.00 03

தனிநாடு கேட்டுப் போராடும் பயங்கரவாத குழுக்கள் மார்க்சிய சித்தாந்த ரீதியாக போராடுகிறார்கள். ஆனால் இழந்த உரிமைகளை மீட்கும் நோக்கில் இவர்கள் போராடவில்லை. இவர்களுக்கு ஆதரவளிப்பது தேசத் துரோகமாகும்.

# லலித் அதுலத்முதலிக்கு ராஜீவ்-காந்தி எச்சரிக்கை

நியூயார்க், பிப். 24–

அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிப்பதை நிறுத்தாவிட்டால் எந்த வகையிலும் இலங்கைக்காக நாங்கள் உதவிகரமாக இருக்க முடியாது என்று இலங்கை ராணுவ மந்திரி அதுலத் முதலியிடம் எச்சரிக்கை விடுத்திருப்பதாக ராஜீவ்காந்தி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பத்திரிகை ஒன்றிற்கு அளித்துள்ள பேட்டியில் பிரதமர் ராஜீவ்காந்தி குறிப்பிட்டிருப்பதாவது:–

**தலையீடு இல்லை**

இலங்கையின் உள் நாட்டு விஷயத்தில் இந்தியா தலையிடாது என்று ஏற்கெனவே பல முறை வலியுறுத்திக் கூறி விட்டேன். ஆனால் அவர்கள் ராணுவத்தைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதாகத் தெரியவில்லை.

இலங்கை ராணுவம் நடந்து கொள்ளும் முறை பற்றி பயங்கரமான தகவல்கள்வந்து கொண்டிருக்கின்றன. இது எங்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்தி வருகிறது.

**எச்சரிக்கை**

இது குறித்து இலங்கை ராணுவ மந்திரி அதுலத் முதலியிடம் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன்.

அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிப்பதை நிறுத்தும் வரை இலங்கைக்கு இந்தியா உதவிகரமாக இருக்க முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளேன்.

ஆயினும் அவர்களது நடவடிக்கையில் மாறுதல்இல்லை.

இவ்வாறு ராஜீவ்காந்தி கூறினர்.

**பாகிஸ்தானுக்கு ஆயுதம்**

மேலும் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுதம் கொடுப்பது தான் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையேஉள்ள பெரிய பிரச்சினையாக உள்ளது என்று ராஜீவ் குறிப்பிட்டார்.

"இந்த ஆயுதங்களை எங்களுக்கு எதிராகப் பயன்படுத்தும் சூழ்நிலை இருந்து வருகிறது" என்றார் அவர்.

–நன்றி தினமலர்–

# அரபாத் செய்த ஒப்பந்தத்திற்கு அதிருப்தி கோஷ்டி கண்டனம்

டமாஸ்கஸ், பிப்.15—

இஸ்ரேலுடன் சமரச பேச்சு வார்த்தை நடத்துவதற்கு கூட்டு யுக்தி ஒன்றை கண்டறிவது என்று ஜோர்டான் மன்னர் ஹுசைனுடன் பாலஸ்தீன விடுதலை ஸ்தாபன (பி.எல்.ஓ.) தலைவர் யாசர் அராபத் செய்து கொண்ட சமீபத்திய ஒப்பந்தத்தை பி.எல்.ஓ.வைச் சேர்ந்த இடது கம்யூனிஸ்டு கோஷ்டி கண்டித்துள்ளது.

பாலஸ்தீன விடுதலைக்கான டாக்டர் ஜார்ஜ் ஹபாஷின் மக்கள் முன்னணி டமாஸ்கஸிலிருந்து நேற்று ஒரு அறிக்கை வெளியிட்டது.

–நன்றி தினமணி–

படிப்பகம்

www.padippakam.com



# வீர அஞ்சலி

## விடுதலைக்காக கொலை செய்யப்பட்ட கல்லறைகளில் விடுதலை விதை முளைக்காத கல்லறைகள் எதுவுமே இல்லை.


லெப்டினன்ட் விஜி
(அகிலன்)


லெப்டினன்ட் கோபி
(கோவிந்தராஜா)


தோழர் ராஜன்
(தனபாலசிங்கம்)


லெப்டினன்ட் குணம்
(சின்னான்)

தோழர்களே!

விடியும் வரை காத்திருக்காது
இரவோடு இரவாக

எங்கே புறப்பட்டு விட்டீர்கள்
இந்தக் கொடிய இருளிலும்

உம் பாத சுவடுகள் மட்டும்
எமக்கு ஒளிவாய் தெரிகின்றது.

அந்த அடிகளை தொடர்ந்து
ஆயிரமாய் அணிவகுத்து
இறுதிப் போர் முழக்கமிடுவோம்.

இறுதி வெற்றிக்கு வாக்களித்த

உங்கள் உடல்கள் சிதைந்தாலும்

நாளை பறக்கும் வெற்றிக் கொடியை
அசைத்து செல்லும் வசந்தக் காற்றில்
உம் நினைவுகள் தெரியும்.

நாளை சஞ்சரிக்கும் சூரியன்
சிவப்பு நிலத்து வயல் வெளிகளில்

உழைப்பாளர்களின்
ஏற்றமிகுதாய் அமைத்திடவே

வீரர்கள் சிந்திய வியர்வை
உப்பு நீராய் வடித்த

எம் உழைப்பாளர் கண்ணீரை
புதுப் பொலிவுடன் மாற்றிடவே

புறப்பட்ட போர்வீரனே
சமவுடமை கொடிதான்
உம் நினைவுகளாய் பறக்குமடா.


தோழர் அன்பு
(அன்பழகன்)


தோழர் சார்ள்ஸ்

படிப்பகம்